# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆவணி 3உ (19—8—73) ஞாயிறு றஜப்: ஆகிர் 19 —புத்தகம் 26 இதழ் 36


## தமிழரசு மாநாட்டில் தோழமைக் கட்சிகள்!

காங்கேசன்துறையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சியின் 12வது மாநில மாநாட்டில் தமிழரசுக் கட்சி பிரதான அங்கம் வகிக்கும் தமிழர் கூட்டணியில் இணைந்துள்ள தோழமைக்கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்று உரை நிகழ்த்தவுள்ளனர்.

தோழமைக் கட்சித்தலைவர்களையும் மாநாட்டுக்கு அழைப்பதெனத் தமிழரசுப்பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

# விடுதலைக் கவிஞன் பாரதி பிறந்தநாளில்

# உண்ணாவிரத இயக்கம்!

## 50 நாட்கள் தொடர்ந்து நடக்கும்! தமிழ் இளைஞர் பேரவை அறிவிப்பு!

காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன் சிறையில் இன்று 444-வது நாள்

ஆண்டுக்கணக்காக எவ்வித நீதிவிசாரணையோ விடுதலையோ இன்றி சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்; அல்லது அவர்கள் விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

—இக் கோரிக்கையை முன் வைத்து 50 நாள் உண்ணாவிரத இயக்கமொன்றை தமிழ் ஈழத்தின் சகல பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடத்துவதற்கு தமிழ் இளைஞர் பேரவை தீர்மானித்துள்ளது.


செப்டம்பர் 7, 8, 9ம் நாட்களில் காங்கேசன்துறையில் நடைபெற விருக்கும் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாட்டையடுத்து இந்த உண்ணாவிரத இயக்கம் தொடங்கப்படுமென இளைஞர் பேரவைப் பேச்சாளர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

பெரும்பாலும் இந்த உண்ணாவிரத இயக்கம் புரட்சிப் புலவன் சுப்பிரமணிய பாரதியாரின் ஜனன தினமான செப்டம்பர் 11ம் நாள் தொடங்கப்படும் என்று தெரியவருகிறது. தொகுதி வாரியாகவும், கிராமவாரியாகவும், ஒரு நாளைக்கு ஒரு இடம் என்ற ரீதியில் தமிழ் ஈழம் முழுவதும் இந்த உண்ணாவிரத இயக்கம் நடைபெறவிருக்கிறது.

உணர்ச்சிக் கவிஞன் காசி, ஆனந்தன், வண்ணை ஆனந்தன், சேனாதிராசா போன்ற எண்ணற்ற வீர இளைஞர்களை சிறையிலடைத்து அரசு கொடுமைப்படுத்தி வருவதாகவும், இந்த இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும்— அல்லது விசாரணை நடத்த வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயமான உள்ளக் குமுறலை அரசுக்கு வெளிப்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'நாகா' நாமம் வாழ்க!



ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமாம் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும் விடுதலைப் போராட்டங்களில் முன்னணி வகித்தவரும் தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தமிழ்மக்களுக்கே அர்ப்பணித்தவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் அமரத்துவ தினம் 17.8.73 ஆகும். இவ்வாரம் முழுவதும் ஈழத் தமிழ் நாடெங்கும் நாகா நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

விடுதலை உணர்வுள்ள கடைசித் தமிழன் இந்நாட்டில் இருக்குமட்டும் வீரர் நாகநாதனின் நினைவும் தமிழ் தேசிய இனத்தின் நெஞ்சத்தில் இருந்துகொண்டே இருக்கும்! வாழ்க அமரர் நாகநாதன் நாமம்!

(உள்ளே சிறப்புக் கட்டுரை)

## கலாசார அமைச்சருக்கு நன்றி!

''கிழக்கிலங்கைதான் முதன் முதல் ஆரிய சிங்களவர் குடியேறிய இடம். இதற்கான ஆதாரங்கள், திருக்கோணமலை மட்டக்களப்பு, பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளிலிருந்து எமக்கு கிடைத்துள்ளன.''

— (சிங்கள) கலாசார அமைச்சர்
எஸ். எஸ். குலதிலகா
(வீரகேசரி 14—8—73)

— கிழக்கிலங்கை, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம். கிழக்கிலங்கையின் பூர்வீக குடிகள் — கிழக்கிலங்கையின் சொந்தக்காரர்கள் — தமிழ் பேசும் மக்கள். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை — சிங்களவர்கள் அங்கு 'வந்தேறு குடிகள்' தான் — உரிமையாளர்களல்லர். இந்த உண்மையை இப்படி வெளிவெளியாக ஒப்புக்கொண்ட அமைச்சருக்கு கிழக்கிலங்கைத் தமிழர்கள் நன்றி கூறுகிறார்கள்!

## ஏழை! துரையப்பா!!

சுதந்திரக்கட்சி ஏழைகளின் கட்சி— அதனால் தான் தாம் சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதாக கூறிவருகிறார் ஆல்பிரட் (டி) துரையப்பா! ஆம் துரையப்பா ஏழைதான்!

அவரென்ன— 1964ம் ஆண்டு சுதந்திரக் கட்சி அரசைகவிழ்ப்பதற்காக லேக்ஹவுஸ் நிறுவனத்திடம் மண்டியிட்டவரா என்ன?

அவரது குடும்பத்துக்கு கொழும்பில் ஒன்றரை இலட்சம் ரூபாவில் ஒரு பங்களாவும் யாழ்ப்பாணத்தில் ஒரு வீடும் ஆக இரு வீடுகள் இருக்கிறதா என்ன?

அவரது குடும்பத்துக்கு இரண்டு கார்கள் இருக்கிறதா என்ன?

அவரது மனைவிக்கு ஆண்டொன்றுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபா வருடா வருடம் மாநகர சபையிலிருந்து கூலிகூலியாகக் கிடைக்கிறதா என்ன?

அவர் கொழும்புக்கு வந்துபோகும் போதெல்லாம் விமானத்திலா வந்து போகிறார்?

ஆகவே அவர் ஏழைதான்! நம்புங்கள்!!

## அமைச்சரின்நன்றியுணர்வு!

''அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது: இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற கிளர்ச்சியில் தமிழ் வாலிபர்கள் சேராதிருந்ததையே இங்கு குறிப்பிடுகிறேன். கிளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆதரவு அளிக்காதிருந்ததை அரசு ஒருபோதும் மறக்கமாட்டாது.''

—களுதாவளையில் அமைச்சர்
கே. பி. இரத்னாயகா
(தினபதி 13. 8. 73)

— அந்த நன்றியின் வெளிப்பாடுதானா தங்கள் இனமொழி உரிமைகளுக்குப் போராடிய தமிழ் இளைஞர்களை எதுவித விசாரணை எதுமின்றி, ஆண்டுக்கணக்காக சிறையில் அடைத்து வைத்திருப்பது? அந்த நன்றியின்

(5-ம் பக்கம் பார்க்க)

## கல்குடாவில் சிங்களக்குடியேற்றம்! தேவநாயகம் கடும் ஆட்சேபம்!!

தமிழ் மக்களின் பாரம்பரியபிரதேசமாகிய கல்குடாத் தொகுதியில் உள்ள கிருமிச்சைக் குடியேற்றத்திட்டத்தில் வெளியிடங்களிலிருந்து சிங்கள இராணுவத்தினரைக் கொண்டு வந்து குடியேற்றும் அரசின் தமிழ் இன ஒழிப்புத் திட்டத்துக்கு கல்குடா பா. உ. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் கடும் ஆட்சேபம் எழுப்பியுள்ளார்.

உள்ளூர் மக்கள் காணியின்றி தவிக்கும் போது வெளியிடங்களிலிருந்து ஆட்களைக்கொண்டுவந்து குடியேற்றுவது நாட்டின் காணிக்கொள்கைக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமானது என்றும் திரு. தேவநாயகம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

தமிழ் பிரதேசத்தில் சிங்களவரை திட்டமிட்டுக் குடியேற்றும் செயல், சிறுபான்மை இனத்தின் பிரதிநிதித்துவத்தைப் பிடுங்கும் ஒரு முயற்சியாகும். அது மட்டுமன்றி, ஐ. நா. மனித உரிமைகள் சாசனத்துக்கு முரணான செயலாகவும் இது அமைகிறது.' என்றும் திரு. தேவநாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தமிழர் தந்தை பிறந்த மண்ணில் தமிழரசு மாநாடு—செப்டம்பர் 7 8,9ல்!**
**அடிமைத்தனம் துடைத்திட, ஆர்த்தெழுந்து வருவீர் பாசறை நோக்கி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்பிரட்(டி) துரையப்பரின் அரசியல் வாண வேடிக்கை!

## வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக்கொள்! தமிழ் உரிமைப் பிரச்சினையில் தலையிடாதே!

ஆட்சியாளரிடம் விழுந்து நக்கி சுகபோகம் அனுபவித்து வருபவர்கள் சில சமயங்களில் அடிமைப்பித்தம் தலைக்கேறி புலம்பத் தொடங்கி விடுவதுண்டு— அரற்றத்தொடங்கி விடுவதுண்டு — பந்தம்பிடிக்கப் பிடிக்கப் பைத்தியம் முற்றி விடுவதுண்டு.

அப்படிப்பட்ட பிறவியொன்று — அடிமைப்பித்தம் தலைக்கேறி வாயில் வந்தபடி அரற்றத்தொடங்கியிருக்கிறது — இப்போது சில காலமாக!

அந்தப்பிறவியின் பெயர்தான் ஆள்பிரட்(டி) துரையப்பா. சிறிலங்கா சுதந்திரக்கட்சி யென்று தன்னை அழைத்துக்கொள்ளும் இது வாயில்வந்தபடி இப்போது பிதற்றுகிறது — அதன் பேச்சை ஏதோ பெரிய அரசியல் மேதையின் அறிவுரையென்று கருதி பெரிதாக வெளியிடுகின்றன ஆட்சிக்கு பந்தம் பிடிக்கும் நாளேடுகள்!

அடிமைப்பித்தம் தலைக்கேற ஏற அப்படித்தான் பிதற்றல்கள் வெளிவரும்! அப்படிப்பட்டவர்களின் பேச்சுக்களைக் கேட்பதற்கு யாரும் இருந்தால்தானே!

அங்கு கூட்டம் நடந்தது— இங்கு கூட்டம் நடந்தது — அதில் துரையப்பா பேசினார் என்று ஐந்து பத்தி, எட்டுப் பத்தி தலைப்புக்கொடுத்து அவரது 'அறிவுரைகளை' வெளியிட்டு தமிழ் மக்களை அவமதிக்கின்றன நாளேடுகள்!

இந்தக்கூட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் பத்திரிகை அலுவலகங்களில்நடைபெறும் கூட்டங்கள் என்பது நமக்குத்தெரியும்!

வடபகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வளர்வதாகத் தன் சிங்கள எஜமானர்களிடம் காட்டி இவர் தனது பிழைப்பை நடத்திக்கொள்ளட்டும் — அதில் நாம் தலையிடவில்லை—

ஆனால் தமிழினத்தவர்கள் வெறும் மடையர்கள் என்ற நினைப்பில் இவர் வெந்ததைத்தின்று வாயில் வந்ததைப்பேசிக்கொண்டிருப்பதை நாம் அனுமதிக்க முடியாது!

### தேசியக்கட்சி எங்கேயுண்டு?

தமிழர்கள் 'தேசியக்'கட்சிகளில் ஏதாவதொன்றில் சேரவேண்டுமாம்! — இது துரையப்பாவின் கண்டுபிடிப்பு!

இந்நாட்டில் 'தேசியக் கட்சிகள்' என்று சொல்லக்கூடிய கட்சிகள் எதுவுமே இன்று இல்லை. இரண்டுதனித் தனித் தேசிய இனங்கள் வாழும் இந்நாட்டில் ஒரே தேசியக்கட்சி இருக்கமுடியாது.

என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் சமஅந்தஸ்து கொள்கையை விட்டு சிங்களம் மட்டும் — எனும் கொள்கையை ஏற்றுக் கொண்டனவோ அன்றிலிருந்தே 'தேசியம்' என்பது தமிழ்த்தேசியம் சிங்களத் தேசியம் என இரண்டாக உடைந்துவிட்டது! இரு கட்சிகளும் 'தேசியக் கட்சி' என்ற நிலையிலிருந்து தூக்கியெறியப்பட்டுவிட்டன!

சிங்களம் மட்டும், பௌத்தம் மட்டும் என்றகொள்கையுடைய கட்சிகளா தேசிய கட்சிகள்? இவற்றுடனா தமிழ் மக்கள் சேரவேண்டும்?

துரையப்பா பிழைப்பு நடத்துவதற்காக இந்த இரு கட்சிகளிலும் ஏதாவதொன்றில் மாறிமாறிச்சேரலாம்—

'ராஜராஜன்'

### துரையப்பா போல மானங் கெட்டவர்களா தமிழர்கள்?

### பதவி ஆசை பிதற்ற வைக்கிறது

தேசியக்கட்சிகளில் சேர்ந்தால் நாட்டின் பிரதமராக கூட தமிழன் வரலாம் என்று கனவு காணுகிறார் ஆல்பிரட்(டி) துரையப்பா! தமிழனுக்கு பிரதமர் பதவி வந்தால் கூட அது தேவையில்லை — தன்னுடைய மொழி, இன பிரதேச உரிமைகளே தேவை— பதவிக்காக பல்லை இளிப்பவன் தமிழனல்ல! உரிமைகளை விற்றுவிட்டு சலுகை பெறுவதற்கு தமிழர்கள் அனைவரும் துரோகப்பர்கள் அல்லர்!

இந்நாட்டில் சிறு சிறு பதவிகள்கூட - கக்கூஸ் கழுவுகிற வேலைகூட தமிழனுக்கு மறுக்கப்பட்டுவருகிறநேரத்தில், தமிழனுக்கு பிரதமர் பதவி கிடைக்கும் என்று ஆசை வலை வீசுகிறார் துரையப்பா என்றால் அவர்எண்ணமெல்லாம் பதவி மீதுதான் இருக்கிறதென்று பொருள்! பதவிப் பித்தம் அவருக்கு தலைக்கேறிவிட்டதென்று தான் பொருள்!

### அந்த மர்மம் என்ன?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தாம் நீண்ட நெடுங் காலமாக ஆதரித்து வருகிறாராம் துரையப்பர்— யாருக்கு விடுகிறார் கப்சா? தமிழ் மக்கள் அரசியலில் மறதிபிடித்தவர்கள் என்று இவர் தப்புக்கணக்கு போட்டுவிட்டாரா?

1964ம் ஆண்டு சுதந்திரக் கட்சி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது— லேக் ஹவுஸ், அரசைக் கவிழ்ப்பதற்காக அரசாங்கக்கட்சி உறுப்பினர்களில் பலரை விலைகொடுத்து வாங்கியதாக கூறப்பட்ட நேரத்தில் —அரசாங்கக்கட்சியிலிருந்து வந்த துரையப்பா — அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களிக்க வேண்டிய துரையப்பா,— வாக்களிப்பு சமயத்தில் திடீரென தலைமறைவான அந்த மர்மம் என்ன? முதலாளித்துவத்துக்கு முண்டு கொடுப்பதற்காகத்தான் அப்படிச் செய்தாரா?

கடந்த 1970 பொதுத் தேர்தல் சமயத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை துரையப்பா ஆதரிப்பதாக கதை பரவிய நேரத்தில் — விழுந்தடித்துக் கொண்டு 'நான் சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதாக கூறப்படுவது பொய்—நான் சுய இச்சைதான்' என்று அறிக்கைவிட்டவர்தான் இந்தத் துரையப்பா—

அப்படிப்பட்டவர்தான் இப்போது சுதந்திரக்கட்சி கடை விரித்து — அரசியலில் வியாபாரம் நடத்துகிறார்! தனது சிங்களஎஜமானர்களை ஏமாற்றி பிழைப்பை நன்றாக நடத்தட்டும் — ஆனால் தமிழர்களை முட்டாள்கள் ஆக்கவேண்டாம்!

### இவர் என்ன பிரதமரா?

'இன்று தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு நிச்சயம் தமிழில் பதில் கிடைக்கும்—சிங்களத்தில் பதில் கிடைத்தால் என்னிடம் முறையிடுங்கள்' — என்று ஆபத்பாந்தவர்—அநாதரட்சகர்போல அபயகரம் நீட்டியிருக்கிறார் ஆள்பிரட் (டி) துரையப்பர்! (ஆதாரம் 7.8.73 ஈழநாடு)

இதைப் படிக்கும்போது விலாநோகச் சிரிப்பும் வருகிறது. அதே நேரத்தில் தமிழ் மக்களை முட்டாள்களாக்க துரோகப்பர் விடும் வாணவேடிக்கைகளைக்காண ஆத்திரமும் வருகிறது.

தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழில் பதில் கிடைக்குமாம்—இல்லாவிட்டால் தன்னிடம் முறை

(6-ம் பக்கம் பார்க்க)

---

## செப்டம்பர் 7, 8, 9-ம் நாட்களில் காங்கேசன் துறையில் தமிழரசு மாநில மாநாடு! தமிழ் மறவர் கூடிடும்பாடி வீடு!!

ஈழத்தமிழ் தேசிய இனத்தின்
விடுதலை அணி தமிழர் கூட்டணி!
தமிழர் கூட்டணியின் முதுகெலும்பு
இலங்கைத் தமிழரசுக்கட்சி!

ஃ

தமிழரசுக்கட்சியின் திண்டோள் வீரர்கள்—
முன்னணித் தலைவர்கள் — செயல் வீரர்கள்
காங்கேசன்துறையில் பாசறை அமைக்கின்றனர்!

கன்னித்தமிழ்க்குலத்தின் மானம் காக்கும்
வீரர்கள் வாழும் பூமியான காங்கேசன்துறையில்—
தமிழர் குலத்தின் தனிப்பெரும் வழிகாட்டி
தந்தை செல்வா பிறந்த புண்ணிய மண்ணில்—
அமரர் வன்னியனாரை ஈன்றெடுத்த புனிதப்பூமியில்
அணிதிரள்கிறது தமிழரசுப் பாசறை!

ஃ ஃ

இருபன்னிரண்டு ஆண்டுகளாக இனத்தின் விடுதலைக்காக
போராடி வருவது தமிழரசு இயக்கம்!
ஈழத்தமிழர் வரலாற்றில் அறவழிப்போராட்டத்தை
துவக்கி வைத்தது தமிழரசு இயக்கம்!!
சிதறிச்சின்னா பின்னப்பட்டுக்கிடந்த
தமிழ் ஈழ மக்களை ஒரே தேசிய இனமாக்கி விடுதலை
உணர்வூட்டியது தமிழரசு இயக்கம்!!

ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை
ஆள நினைப்பதில் என்ன குறை? என்று
முழக்கமிடுவது தமிழரசு இயக்கம்!

ஃ ஃ

சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக
காலி முகத்திடலில் அறப்போர் நடத்தி
கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்கள் —

சிங்கள சிறியை எதிர்த்துப் போராடி
சிறைகளை நிரப்பியவர்கள் —
சிங்கள ஆட்சியையே ஸ்தம்பிக்கச் செய்து
செந்தமிழ் ஈழத்தில் சத்தியப்போர் நடத்தியவர்கள்

சிங்கள ஆட்சியை எதிர்த்துப் போராடி
சிறைகளிலும் தடுப்புக்காவலிலும் வாடியவர்கள்
தமிழரசுக்காளைகள் — தமிழரசுத்தலைவர்கள்!

**இத்தகைய தியாக வரலாறு நிட்டிவரும்
தீரர்கள் திரள்கின்றனர் காங்கேசன்துறையில்!!**

ஃ ஃ

இயக்கத்தின் உணர்ச்சிமிகுகாளைகள்
காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சேனாதிராஜா

போன்ற எண்ணற்ற இளைஞர்கள் ஆண்டுக்கணக்காக
— மாதக்கணக்காக
சிங்களச் சிறைக்குள்! விசாரணை
ஏதுமின்றி அடைக்கப்பட்டுள்ளனர்!

சிங்கள ஆட்சியின் அரசியல் சட்டத்தை எதிர்த்து
ஆட்சியாளருக்கு சவால் விடுத்து
பதவி துறந்துள்ளார் தந்தை செல்வா!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாது பொதுவாக தமிழ் மக்களையும்—குறிப்பாக காங்கேசன் துறை மக்களையும் — அவமதித்து வருகிறது சிங்கள ஆட்சி!

சிங்கள ஆட்சியின் கொடுங்கோன்மையிலிருந்து விடுபட 'தமிழ் ஈழம்' அமைப்பதுபற்றி தமிழ் இனம் தீவிரமாக சிந்தனை செய்யும் வேளை...!

இவ்வளவு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வேளையிற்தான் காங்கேசன்துறையில் தமிழரசு மாநாடு கூடுகிறது!

அதுமட்டுமல்ல—

இந்த மாநாட்டிலேதான் — சிங்கள ஆட்சி
கண்டு நடுங்கும் சிங்கேறு — செல்வாவின்
சிந்தை கவர்ந்த அரசியல் வாரிசு — தங்கத் தமிழ்
தம்பிகளின் உள்ளமெலாம் நிறைந்த அண்ணன்—
தன்னுடைய நேரம், காலம், நினைப்பு முழுவதையுமே
தமிழினத்தின் மீட்சிக்காக அர்ப்பணித்துவரும்
தியாகச்செம்மல் — தமிழ் இளைஞர் படைமீது
விழியோட்டி வழிகாட்டும் வீரத்தலைவன் — தமிழரசுக்
கட்சியின் தானைத்தளபதி—தமிழர் கூட்டணியின்
தலைமைச்செயலாளர் — நாவலர் அமிர்தலிங்கம்
அவர்கள் கட்சித் தலைமையையும் — தமிழினத்தின்
தலைமையையும் ஏற்கப்
போகின்ற இதயம் குதூகலிக்கும் காட்சியை
காணப்போகின்றோம்!

நாவலர் தலைமையில் புதிய மிடுக்குடன் — புதிய வேகத்துடன் புதிய பாதையில் — 'தமிழ் ஈழம் தமிழர் தாகம்' — எனும் விடுதலைப்பாதையில் முன்னேறிச் செல்லப்போகிறது தமிழரசுப் பாசறை!

சோர்வும் அயர்வும் களைந்து துடிதுடிப்புடன் சுயாட்சிப்பாதை
யில் வீறு நடை போடுவதற்கு வேண்டிய கருவிகள்
நிர்மாண வடிவில் உருவாக்கப்படவிருக்கின்றன
இந்த மாநாட்டில்!!

எனவே — தமிழ்க் காளையரே! கன்னியரே!
பெரியோரே தாய்மாரே!!
செப்டம்பர் 7, 8, 9,ம் நாட்களில் காங்கேசன் துறை
நோக்கி படையெடுப்பீர்!
பல்லாயிரக்கணக்காக திரள்வீர்!
உங்கள் உணர்ச்சி கண்டு சிங்கள ஆட்சியும்
அதற்கு பல்லக்கு தூக்குவோரும்
பதறித் துடிக்கட்டும்! மூலைக்குள்
முக்காடிடட்டும்!!

**வருவீர் தமிழரசு மாநாடு நோக்கி!!**
**தருவீர் தமிழ் ஈழ விடுதலைப்போருக்கு உங்கள் ஆதரவை!**

- அழைக்கின்றார் வரவேற்புக் குழுத்தலைவர் அஞ்சா நெஞ்சன் எங்கள் குமரகுரு!
- அழைக்கின்றார் மாநாட்டு செயலாளர் செயல் வீரர் நடராசா!
- வரவேற்பு செயலாளர்கள் இளைஞர்கள் புஷ்பராசாவும், குணாளனும் இருகரம் நீட்டி அழைக்கின்றனர்!!

தமிழரசுக்கிளைகள் எல்லாம் புனரமைக்கப்பட்டு மாநாட்டுக்கு தங்கள் பிரதிநிதிகளை தவறாது அனுப்பட்டும்!

[illegible] தமிழ் ஈழம்

—கோவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை இடைத்தேர்தலும் 'தேசப்பிரியா'வின் திமிர்வாதமும்!

பொதுவாக ஒரு நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாக, பொறுப்புணர்ச்சியுடன் கருத்துக்களை எடுத்துரைப்பவர்களாக, இருப்பார்கள் என்றே எல்லோரும் எதிர்பார்த்திடுவர்.

ஆனால் அமைச்சர்களும் பொறுப்பற்ற தனமாக — வாயில்வந்தபடி பேசக்கூடியவர்கள்தான் என்பதை காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற எதிர்க்கட்சிப் பிரேரணைமீதான விவாதத்தின் போது தேசிய பேரவையில் பதில் அமைச்சர் இரத்ன தேசப்பிரிய சேனநாயகா அவர்கள் நிகழ்த்திய பேச்சு நிரூபிப்பதாக இருக்கிறது.

"சுற்றிச்சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்" நிற்பது போல — காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாததற்கு காரணம் அங்கு வன்முறைச் சம்பவங்கள், காடைத்தனங்கள் நடைபெறுவதுதான் என்று பொதுப்படையாக அடித்து முழக்கியுள்ளார் பதில் அமைச்சர்.

கடந்த ஆறுதிங்களுக்குமேலாக காங்கேசன்துறைத் தொகுதியில் ஏதாவது அரசியல்வன்முறைகள் நடைபெற்றதாக நாம் கேள்விப்படவில்லை — பதில் அமைச்சராலும் அப்படி எதையாவது குறிப்பிட்டுச்சுட்டிக்காட்டமுடியவில்லை!

பொதும்பலாக வன்முறை ... வன்முறை என்ற அதே ஓலம் — ஒப்பாரி ...! காங்கேசன்துறைத்தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு இவர்களுக்குகிடைத்திருக்கும் ஒரே சாட்டு இதுதான்!

## ஆளுங் கட்சியே வன்முறையை தூண்டுகிறதா?

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்துங்கள் என்று கூறினால்—'தற்கொலைப்படை' என்றும் 'தென் இந்தியாவுடன் தொடர்பு' என்றும் ஏதோ எல்லாம் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஆளுங்கட்சியினர் பேசுகிறார்கள்!

ஒருவேளை தற்கொலைப் படையொன்றை அமைத்து விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற வன்முறை எண்ணத்தை ஆளுங்கட்சியினரே, தீவிர வாதக்கருத்துடைய தமிழ் இளைஞர்களுக்கு, இப்படியான தமது பேச்சுக்கள் மூலம் ஊட்டுகிறார்களோ என்னவோ நமக்குத் தெரியாது.

சிறையில் நீதிவிசாரணை ஏதுமின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 37 தமிழ் இளைஞர்களைப்பற்றி ஏதோ 'வெல்லாம்' திரும்பத்திரும்ப கூறித்திரிகின்றனர் ஆட்சியாளர்கள்!

சிறையிலடைபட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை அவசரகாலச் சட்டத்தைபயன்படுத்திவிசாரணை ஏதுமின்றி ஆண்டுக்கணக்காகத் தடுத்து வைத்திருக்காதே — அவர்களை கொண்டுவா நீதிமன்றத்துக்கு — குற்ற மிருந்தால் வழக்கைப்போடு — நீதிமன்றம் தீர்ப்புக்கூறட்டும்—என்றுதானே தமிழர் கூட்டணி கேட்கிறது! அதைச் செய்யாமல் — யாரை "பிளாக்மெயில்" பண்ணுகிறீர்கள்?

## தென்னிந்திய பூச்சாண்டி!

தென்னிந்திய அரசியல் கட்சிகளும், தென்னிந்திய பத்திரிகைகளும் தமிழர் கூட்டணியின் இயக்கங்களைப் பற்றியும் — இலங்கைத் தமிழர்களின் போராட்டங்களைப்பற்றியும் கரிசனை கொண்டுள்ளனவாம்; செய்தி போடுகின்றனவாம்; ஆதரித்து கருத்து தெரிவிக்கின்றனவாம்.

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாததற்கு அரசாங்கத்தின் சார்பில் பதில் அமைச்சரால் தரப்பட்ட காரணங்களில் இதுவும் ஒன்று!

தமிழினத்தின்நியாயமான கோரிக்கைகளுக்கு— அறவழியிலான போராட்டங்களுக்கு தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் அங்கிருந்து ஆதரவு தந்தால்-அது உங்களுக்குஏன் இங்கு அடிவயிற்றை கலக்குகிறது? தென்னிந்திய பத்திரிகைகள் தமிழர் கூட்டணியின் இயக்கம் பற்றி செய்தி வெளியிட்டால்— உங்களுக்கு அதனால் என்ன கெடுதிநேர்ந்தது? பத்திரிகைகள் செய்திகளை போடத்தானே செய்யும்! அதுவும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்—ஒரே மொழியை பேசுபவர்கள் — ஒரே கலை கலாசாரத்தை கைக்கொண்டு ஒழுகும் தங்கள் சொந்தச் சகோதரத் தமிழர்கள்-ஈழத்தில் உரிமை பறிக்கப்பட்டு நசுக்கப்படு வதைக்காளும்போது தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும் தமிழ் நாட்டு பத்திரிகைகளும் துடிப்பதில் என்ன ஆச்சரியம்? இது இயற்கை வழிப்பட்டதல்லவா?இதைக் கண்டு உங்களுக்கு ஏன் குடல் கலங்குகிறது? நீங்கள் தமிழினத்துக்கு கொடுமை இழைப்பதால் தானே! இதை மறுக்க முடியுமா?

காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடத்தாததற்கு இதுவும் ஒரு காரணம் என்று நீங்கள் கூறும்போது — அது கேட்டு நல்ல உள்ளங்கள் எல்லாம் நகைக்கின்றன!

## வன்முறையும் கூட்டணியும்

வன்முறையைத் தமிழர் கூட்டணியே தூண்டிவிட்டு நடத்துவதாக கூறுகிறீர்களே — தமிழர் கூட்டணி நீங்கள் கூறுவதுபோல் உள்ளபடியே, அஹிம்சை வழியை கைவிட்டு, வன்முறையில் செயல்படுமானால் வன்முறையைத் தூண்டிவிடுமானால் — இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிக்கு அடிக்கொருதரம் இவ்வளவு குசாலாகச் சென்று பாதுகாப்புடன் திரும்பிவர முடியுமா? தமிழ்ப்பகுதியில் காலடி எடுத்து வைக்கத் தானும் முடியுமா?

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து இவ்வளவு கொடுமைகள் இழைத்தபின்னரும்-தமிழ்ப்பகுதிக்கு அமைச்சர்கள் பாதுகாப்புடன்சென்றுதிரும்புகிறார்கள்என்றால்—தமிழர் கூட்டணி தமிழ் மக்களை—அறவழியில், அஹிம்சைவழியில் நடத்திச்செல்வது தான் காரணம்! இதைப்புரிந்து கொள்ளுங்கள்!!

நீங்கள் எமக்கு ஆத்திரத்தை மூட்டுகிறீர்கள் — எங்களை வன்முறையாளர்கள் என்று கூறுகிறீர்கள்- என்பதற்காக நாங்கள் வன்முறையாளர்களாகிவிட மாட்டோம்! ஏனெனில் அறவழியை எங்கள் அரசியல் நெறிமுறையாக மட்டுமல்ல — வாழ்க்கை முறையாகவும் ஏற்றுக்கொண்டவர்கள் நாங்கள்!

## பதவியை விட்டு இறங்கு!

தந்தை செல்வா பதவி துறந்தது-1972 அக்டோபர் மூன்றும் திகதி! அன்றிலிருந்து இன்றுவரை - இடைத்தேர்தலை நடத்தும்படி கேட்கும் போதெல்லாம் — அங்கு வன்முறை நடக்கிறது—மனிதனை மனிதன் பிடித்து தின்னுவதைதவிர மற்றக் கொடுமையெல்லாம் நடக்கிறது — மக்கள் அச்சமின்றி நடமாடமுடியவில்லை-என்று கூறிவருகிறது ஆட்சிபீடம்!

(ஆனால் அரசின் கூற்றுப்படி இவ்வளவு கொடுமைகள் நடைபெறும் தமிழ்ப் பகுதிக்குத்தான் வாரம் தவறாமல் அமைச்சர்கள்சென்று வரவேற்புகளும் மலர் மாலைகளும் பெற்றுக்கொண்டுவருவதாக கூறுகிறார்கள் — தமிழ் மக்களில் பெரும்பாலோர் தம்மை ஆதரிப்பதாவும் பிரச்சாரம் செய்கிறார்கள்.)

வாதத்துக்காக — ஆட்சியாளர் கூறுவதுபோல வன்முறைகள் காங்கேசன் துறையில் நடைபெறுவதாகவே வைத்துக்கொள்வோம்!

ஆட்சி உங்களிடம்—அதிகாரம் உங்களிடம் — பொலிசும் இராணுவமும் உங்களிடம் — போதாததற்கு அவசரகாலச்சட்டத்தின் அதிகாரம் வேறு- இவ்வளவையும் வைத்துக்கொண்டு நீங்கள் கூறும் வன்முறையை உங்களால் அடக்க முடியவில்லையென்றால்—அதுவும் ஒரு வருடமாக அடக்க முடியவில்லையென்றால் — அமைதியை ஏற்படுத்த முடியவில்லையென்றால் — உங்களுக்கு ஏன் ஆட்சி? உங்களுக்கேன் செங்கோல் (கொடுங்கோல்)? உங்களுக்கு மானம் ரோசம் இருந்தால் — வன்முறையை அடக்கமுடியவில்லையென்று கூறி பதவி விலகிவிடுங்கள்!!

உண்மையில் 'வன்முறை' என்று ஏதாவது இருந்தால் அல்லவா அதை அடக்குவதற்கு? இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டி இடைத்தேர்தலை நடத்தாமல் தமிழ் மக்களை வேண்டுமென்றே அவமதித்துவருகிறீர்கள்!

இடைத்தேர்தலை நடத்தினால் தந்தை செல்வா மிகப் பெரும் வெற்றியடைவார்; அரசாங்க வேட்பாளர் கட்டுப்பணம் இழப்பார்; அதன் பின்னர் அரசியல் சட்டத்தை தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்றுபிரச்சாரம்செய்ய முடியாதே; தமிழ் மக்கள் விரும்பாத அரசியல் சட்டத்தை அவர்கள் மீது திணிப்பதை உலக நாடுகள் கண்டிக்குமே — பார்த்துப் பரிகசிக்குமே என்ற அச்சம் ஆட்சியாளர்களுக்கு! அதனால்தான் பொருத்த மற்ற பொய்களை கூறி தேர்தலை நடத்த வருகிறார்களில்லை யென்பது தமிழ் மக்கள் அறிந்த உண்மை.

## ஜனநாயகம் என்றால் என்ன?

'மக்களைத் தூண்டிக்கிளர்ச்சியை உண்டு பண்ணும் தமிழர் கூட்டணியினர் ஜனநாயகம்பற்றி எப்படி பேசலாம்?' என்று கேட்டிருக்கிறார் தேசப்பிரிய சேனநாயகா.

ஜனநாயகத்தில் அமைதியான முறையில் கிளர்ச்சி நடத்துவதற்கு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும்

'எஸ்ஸாரெம்'

உரிமையுண்டு. மக்களுக்குப் பிடிக்காத ஒன்றை ஆட்சியாளர் மக்கள் மீது திணித்தால் அதைஜீரணித்துக்கொண்டுபொறுத்துக் கொண்டு- மக்கள் அமைதியாக இருப்பதுதான் ஜனநாயகம் என்று கூறுகிறாரா அமைச்சர் என்று கேட்கின்றோம்?

அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டும் இயக்கத்தை அமைதியான முறையில் தமிழர் கூட்டணி நடத்தி வருகிறது— அதுவும் காங்கேசன்துறை இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்கென வரும் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டமாட்டோம் என்றும் தமிழர் கூட்டணி அறிவித்தும் இருக்கிறது.

கறுப்புக்கொடி பிடித்து தங்கள் அதிருப்தியை அமைதியானமுறையில் தெரிவிப்பதற்கு ஜனநாயகத்தில் மக்களுக்கும் அரசியல்கட்சிகளுக்கும் உரிமையுண்டு. இந்த உரிமையைத்தான் தமிழர் கூட்டணி பயன்படுத்தி வருகிறது: இது ஜனநாயகத்துக்கு எவ்வகையிலும்முரணானதாகாது:

அமைதியான கறுப்புக்கொடி இயக்கமே ஆட்சியாளர்களுக்கு கலக்கத்தை கொடுக்கிறதென்றால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? குற்றமுள்ள— தமிழர்களின் உரிமையை வழங்காத — அவர்கள் மனம் குறுகுறுக்கிறது!

## பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்டார்களா?

தந்தை செல்வா அவர்களின் பதவி விலகல் — இன்றைய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட பெரும்பான்மையினருக்கு எதிராக விடப்பட்ட சவால் — என்று கூறியிருக்கிறார் பதில் அமைச்சர்.

அல்ல அமைச்சரே அல்ல —தந்தைசெல்வாவின் பதவி விலகல் — தமிழ்மக்கள் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு விட்டதாக அரசாங்கம் கூறித்திரியும் பொய்க்கூற்றுக்கு எதிராக விடப்பட்டசவால்! தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை ஜனநாயகரீதியில் நிரூபிப்பதற்காக விடப்பட்ட சவால்!

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினர் முடிவை ஏற்றுக்கொள்வது வதுதான் என்றும், பெரும்பான்மையினர் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் கூறுகிறார் பதில் அமைச்சர்!

ஒரே மொழி, ஒரே இனம் மட்டும் இந்நாட்டில் வாழுமானால் பெரும்பான்மையினரின் முடிவே ஜனநாயக முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது என்ற அமைச்சரின் கருத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்! ஆனால் இருமொழி பேசும், இரு கலாசாரங்களை கொண்ட இருவேறு தனித் தனித்தேசிய இனங்கள் வாழும் இந்நாட்டில் பெரும்பான்மை இனத்தின் முடிவை மூச்சுபேச்சின்றி சிறுபான்மை இனம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது எவ்வகையிலும் ஜனநாயகமாகாது.

எண்ணிக்கை பலத்தை மட்டுமே வைத்துக்கொண்டு ஒரு தேசிய இனம், இன்னொரு தேசிய இனத்தின் தோள்களில் ஏறிக்குதிரை விடுவதுதான் ஜனநாயகம் என்றால் — அத்தகைய ஜனநாயகம் அடியோடு அழிந்து போகட்டும்!

பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப்பறித்து, சிறுபான்மை இனத்தை அடிமைப்படுத்தி அடக்கியாள முயல்வது ஜனநாயகமல்ல — சிறுபான்மை இனத்தின் உரிமைகளை வழங்கி, சமத்துவமாக நடத்துவதே ஜனநாயகம்!

இது புரியாமல்—ஜனநாயகம்பற்றி அமைச்சர் விளக்கம் கூறப்புறப்பட்டு, ஜனநாயகத்தை இப்படி அவமதித்திருக்கவேண்டாம்!

## தமிழர் ஏற்கவில்லை

புதிய சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை சிங்கள இனத்தவர்களில் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் தமிழ்த்தேசிய இனத்தவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் இனத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேரில் 14பேர் புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள்: இந்த மகத்தான உண்மையை மூடிமறைத்து, ஏன் உங்களை நீங்களே முட்டாள்களாக்கிக்கொள்ளுகிறீர்கள்? உங்கள் ஆணவத்தை — அதிகாரத் திமிரைக் கைவிட்டு வெளிச்சத்துக்கு வந்து உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள்! தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு முதல்வழி தமிழ் தேசிய இனம் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை ஒளிவு மறைவின்றி முதலில் ஒப்புக்கொள்வதுதான்!

## 'நியாயமான' தமிழர்கள்

ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை நியாயமான தமிழர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறுகிறீர்கள்? யார் அந்த 'நியாயமான' தமிழர்கள்? தியாகராசா, அருளம்பலம்,பி.ஆர். செல்வநாயகம், சி. எக்ஸ். மாட்டின் இந்த 4 பேரும், மக்களால் தெரிவுசெய்யப்படாத குமாரசூரியரும், எம். சி. சுப்பிரமணியமும் தான் உங்கள் கண்களுக்கு 'நியாயமான' தமிழர்களாகத் தெரிகிறார்களா?

இவர்களில் அருளம்பலம், தியாகராசா, மாட்டின் மூவரும் தாங்கள் மக்களிடம் கொடுத்த வாக்குறுதியை ஆழக்குழிதோண்டிப் புதைத்துவிட்டு—தாங்கள் எந்தக்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நெருக்கடிக்கு யார் காரணம்?

**1970ம்** ஆண்டுப்பொதுத்தேர்தலின் போது சிறீலங்கா — சமசமாஜ — கம்யூனிஸ்ட் முக்கூட்டணி, வாக்காளர்களைக் கவரக் கூடிய பல இனிப்பான வாக்குறுதிகளை முன்வைத்துப் பதவியைப்பிடித்தது! அதிகாரத்தைக் கைப்பற்றியது!!

இதை யாரும் மறுக்கமுடியாது!

இதில் முக்கியமானது 'விலைவாசியைக் குறைப்போம்— வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் — மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவோம்' —என்பதுதான்!

1964ம் ஆண்டு தாங்கள் ஆட்சியிலிருந்தபோது இருந்த விலைகளையும் 1970ம் ஆண்டு பொதுத்தேர்தல் சமயத்தில் இருந்த விலைகளையும் ஒப்பிட்டுக் காட்டி, விலைவாசியை மீண்டும் குறைத்து, மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வை தங்களால்தான் தரமுடியும் என்று உறுதியளித்து ஆட்சியை கைப்பற்றினர் ஐக்கிய முன்னணியினர்!

இவர்கள் ஆட்சியைப் பிடித்த நாள்முதல், ஒவ்வொரு நாளும் வாழ்க்கைச் செலவுப்புள்ளி உயர்ந்து கொண்டே போகிறது — விலைவாசி அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது!

'என்ன இது' என்று மக்கள் கேட்க ஆரம்பித்த நேரத்தில்....,

'கொஞ்சம் பொறுங்கள் — இந்த மூதவைதான் சோசலிசத்தை கொண்டு வரத்தடையாக இருக்கிறது — அதை முதலில் ஒழித்துக் கட்டிவிடுகிறோம்' — என்று கூறி அதை ஒழித்துக்கட்டினார்கள்!

அப்போதும் விலைவாசி குறையவில்லை — வாழ்க்கை செலவு குறையவில்லை. என்ன இது என்று கேட்டனர் மக்கள்.

'கொஞ்சம் பொறுங்கள். 'பிறிவி கவுன்சில்' தான் சோசலிசத்துக்கு தடையாக இருக்கிறது — அதற்கு 'அப்பீல்' செய்யாமல் தடைவிதித்து விடுகிறோம்' என்றார்கள்— அப்படியே செய்தார்கள்.

அப்போதும் விலைவாசி குறையவில்லை— வாழ்க்கைச் செலவு இறங்கவில்லை—

என்ன இது... என்று கேட்டனர் மக்கள்!

'பயங்கரவாதம்' திடீரென முளைத்து விட்டது— நாமென்ன செய்வோம்' என்று கைவிரித்தனர் ஆட்சியாளர்.

'புதிய அரசியல் சட்டமொன்றை உருவாக்குவோம் — சோல்பரி அரசியல் திட்டம்தான் சோசலிசத்துக்கு தடையாக இருக்கிறது' என்று கூறி அவசரகாலச் சட்டத்தின் கீழ் அவசரமவசரமாக மக்கள் உரிமைகளைப் பறிக்கும் புதிய அரசியல் சட்டம் ஒன்றைத் தயாரித்து சட்டமாக்கினர் ஆட்சியாளர்கள்!

புதிய அரசியல் சட்டம் வந்தது — ஆனாலும் விலைவாசி குறைந்த பாடில்லை — வாழ்க்கைச் செலவு இறங்கிய பாடில்லை! தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் புதிய அரசியல் சட்டத்தின் கீழ் பறிக்கப்பட்டன!

புதிய அரசியல் சட்டம் வந்த பின்னர்தான் — இரவோடிரவாக 'கெசட்' மூலம் விலைவாசிகள் எக்கச்சக்கமாக உயர்த்தப்பட்டன என்பதை நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

இவ்வளவும் செய்த பின்னரும் விலைவாசி குறையவில்லையே — 1970ம் ஆண்டு இருந்ததைவிட இருமடங்கு, மும்மடங்கு அதிகரித்துவிட்டதே என்று கேட்டால்— உலகச்சந்தையில் பொருட்களின் விலை ஏறிவிட்டது—இந்த நிலையில் எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் விலைவாசி உயர்வைக்கட்டுப் படுத்தமுடியாது — எங்களிடம் — 'அலடின்' விளக்கு இல்லை — என்றெல்லாம் கூறி கைவிரிக்கிறார்கள் ஆட்சியாளர்கள்!

முந்திய ஆட்சியினர் உலக வங்கிக்கு இலங்கையை அடகு வைத்து விட்டதாக குற்றம் சுமத்தியவர்கள் — இப்போது தாங்களும் உலக வங்கியினதும் சர்வதேச நாணய கட்டுப்பாட்டுச் சபையினதும் விருப்பங்களுக்கு ஏற்ப தாளம் போட்டு வருகிறார்கள் என்பது அம்பலமாகிவிட்டது!

எமது நாட்டில் விளையும் உப்பை விற்பனை செய்வதற்குரிய விலையைக்கூட சர்வதேச நாணய கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்வதும், அதற்கேற்ப நமது அமைச்சர்கள் ஆடுவதாக கூறப்படுவதும் மிகப்பெரிய கேவலமாகும்!

பணவீக்கம், பற்றுக்குறை, விலை உயர்வு — இம் மூன்றும் நாட்டுமக்கள் இன்று என்றுமில்லாத அளவு துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இருக்கிற சீர்கெட்ட பொருளாதார நிலையில்—வருங்காலத்தில் பயங்கரமான பஞ்சமும் பட்டினிச்சாவுகளும் நாட்டில் ஏற்படக் கூடிய அபாயகரமான அறிகுறிகள் தென்படுகின்றன.

இதற்கு முழுக்க முழுக்க காரணம் — அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே என்று நாம் குற்றம் சுமத்துகிறோம்.

இவ்வளவு நெருக்கடியின் மத்தியிலும்—தான் பதவியில் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக—அவசரகாலச் சட்டத்தைக் கட்டியழுதுகொண்டு — ஆண்டொன்றுக்கு 30 கோடி ரூபாவை ஆயுதப்படைகளுக்காக கொட்டித்தீர்த்துக்கொண்டு இருக்கிறது அரசாங்கம். ஆயுதப்படைகளை நாட்டின் உற்பத்தியை பெருக்குவதற்குப் பயன்படுத்துகிறார்களா என்றால், அதுவும் இல்லை

இந்த நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உணவுற்பத்திப்பெருக்கத்தில் முழுமூச்சுடன் ஈடுபடுவதொன்றின் மூலமே—நாட்டை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் தப்பிப்பிழைக்க முடியும் என்பதை நாம் கிஞ்சிற்றும் மறுக்கவில்லை!




சி. பிரதாபன்
யாழ்ப்பாணம்

கே: உங்கள் அரசியல் வாழ்வில் நீங்கள் அடைந்த மிகப்பெரிய கவலை எது?

ப: நான் ஏன் ஓர் அரசியல் வாதியானேன் என்பதுதான் எனக்குள்ள மிகப்பெரிய கவலை!

கே: சுதந்திரத்தின்மகிமை என்ன?

ப: ஈழத்தமிழர்களுக்கு இன்னும் புரியாத ஒன்று!

கே: தமிழர்களை அடிமையாக்குவதுதானே அரசின் கொள்கை?

ப: கைப்புண்ணுக்கு இன்னும் ஏன் கண்ணாடி தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

❀

சுப்பிரமணியம்,
கொழும்பு-6

கே: ஒரு பத்திரிகை மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

ப: ஒரு பத்திரிகை மக்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அதே சமயத்தில் — மக்கள் தவறான பாதையில் செல்ல ஆரம்பித்தால் மக்கள் அதை விரும்புகிறார்கள் என்ற காரணம் காட்டி நெறியற்ற பாதையில் செல்வதற்கு மக்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடாது. மக்களை பிழையான பாதையிலிருந்து தடுத்து நிறுத்தி சரியானபாதைக்குகொண்டு சேர்ப்பதும் ஒரு பத்திரிகையின் முக்கிய கடமை. உதாரணமாக மக்கள் ஆபாசரசனையை விரும்புகிறார்கள் என்பதற்காக ஆபாச படங்களையும் செய்திகளையும் ஒரு பத்திரிகை தந்தால் — அது ஒரு போதும் மக்கள் கருத்தை பிரதிபலிப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நல்ல பத்திரிகையின் கடமை மக்கள் விரும்புவதைத் தருவதல்ல— நல்லனவற்றை மக்கள் விரும்பும்படி செய்வதுதான்!

❀

நா: நாகேந்திரன்,
ஸ்ரீகதிரேசன் கோவில்,
ஹட்டன்.

கே: புத்தளம் தேர்தல் வழக்கின் முடிவு என்னவாயிற்று? பத்திரிகைகள்வானொலி ஆகியன இருட்டடைப்புச் செய்துவிட்டனவே!

ப: இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை!

கே: சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்படப் போவதாக மூன்வர் ஒரு செய்தி வெளிவந்ததே—என்னவாயிற்று?

ப: வழக்குவைப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள், சாட்சியங்களை ''உருவாக்குவதில்'' அரசு இப்போது இறங்கியிருக்கிறதாக கேள்வி!

இராசதுரை,
கொழும்பு-11.

கே: குமாரசூரியரின் 'ஜனநாயகம்' சொல்லாராய்ச்சி எப்படி?

ப: அந்தக் கன்றாவியை ஏன் கேட்கிறீர்கள்? மனிதர், தனக்குத் தெரிந்த 'கட்டடக் கலை'யுடன் விஷயத்தை நிறுத்திக் கொள்ளாமல் தனக்குத் தெரியாத விஷயங்களைப் பேசப்போய் தன்னையே முட்டாள் ஆக்கிக் கொள்ளுகிறார்! 'ஜனநாயகம்' என்ற சொல்லில் தமிழும், வடமொழியும் கலந்திருப்பதாக ஏதோ பெரிய ஆராய்ச்சியாளர்போல கூறி வைத்து—தமக்கு தமிழும் தெரியாது—வடமொழியும் பூச்சியம் என்பதை இப்படி அவர் வெளிக்காட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை! இவரது இந்தத் 'தமிழ் அறிவை' யாழ்ப்பாணத்துப் பத்திரிகையொன்று வியந்து பாராட்டி எழுதி தன் மூஞ்சியிலும் தானே கரி வேறு பூசியிருக்கிறது!!

❀

ஏ. கே. ரஸாக்,
156, மாவத்தை வீதி,
கொழும்பு-14.

கே: கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் இதுவரை எத்தனை கவிதைகள் இயற்றி உள்ளார்?

ப: ஏறத்தாழ ஆயிரம்!

❀

ப. கந்தசாமி,
கொழும்பு-13.

கே: குற்றம் செய்த ஒருவன் தான் தப்பவேண்டுமென்பதற்காக அதிகாரிகளுக்கு கைலஞ்சம் கொடுத்து தப்பிவிட்டான் இதில் யார் குற்றவாளி?

ப: இலஞ்சம் வாங்குவோரை பதவியில் வைத்திருக்கும் அரசாங்கம்!

குயுக்தியாரிடமிருந்து பதில் பெற விரும்பும் வாசகநேயர்கள் தவறாமல் பின்வரும் முகவரியை அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருவாளர் குயுக்தியார்,
மே/பா.
சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு.

இதற்கு ஆக்கமும் ஊக்கமும், அனுசரணையும் தரவேண்டியவர்கள் ஆட்சிபீடத்திலிருப்பவர்களே. தங்கள் தவறான பொருளாதாரக் கொள்கைகளை திருத்தி, உற்பத்தித்துறையில் மக்களை உற்சாகப்படுத்த வேண்டியவர்கள் அவர்களே! மக்களின் உரிமைகளை வழங்கி அவர்களது அதிருப்திகளை நீக்கவேண்டியவர்கள் அவர்களே!

ஆனால், அவர்கள் அப்படி நடப்பதாக இல்லை!

தமிழ்த்தேசிய இனம், தனது மொழி, இனம் பற்றிய அடிப்படை உரிமைகளை அரசியல் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கடந்த ஓராண்டுக்கு மேலாக கோரி வருகிறது! ஆறுஅம்சக்கோரிக்கையை முன் வைத்திருக்கிறது!!

இந்தக் கோரிக்கையை அலட்சியப்படுத்தி — தமிழ் மக்களின் உள்ளங்களை புண்படுத்தி வருகிறார்கள் ஆட்சியினர்!

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தமிழ் இளைஞர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆண்டுக்கணக்காக சிறைக்குள் தள்ளியிருக்கின்றனர் ஆட்சியாளர்கள் — எதுவித விசாரணையுமின்றி!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்த மறுத்து— தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையையே பறித்து வருகிறார்கள்—

கிழக்கு மாகாணத்தில் வெற்று நிலங்களில் குடியேறி உணவுற்பத்தியில் ஈடுபட்ட மலைநாட்டுத் தமிழர்களை அங்கிருந்து ஆயுதப்படையை ஏவி விரட்டியடிக்கின்றார்கள் —

இப்படி தமிழ் மக்களை இந்த அரசு புறக்கணித்து — அவமதித்துவருவதால், தமிழ் இளைஞர்களின் உள்ளங்கள் இன்று பூகம்பமாகி வருகின்றன.

பொருளாதார நெருக்கடியினின்றும் — அரசின் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகளிலிருந்தும் மீட்சிபெற 'தமிழ் ஈழம்' தனியாகவேண்டும் என்ற கருத்து மெல்லமெல்ல — ஆனால் உறுதியாக வேர்விட்டு வளர்ந்துவருகிறது: —தமிழ் மக்களின் உள்ளங்களில்!

—இத்தனைக்கும் தமிழ் ஈழ மக்கள், பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்திருந்தால்— இந்த அரசு என்றோ கவிழ்ந்திருக்கும் — நாட்டு மக்கள் பஞ்சத்தால் பரிதவித்திருப்பர். தமிழ் ஈழ மக்களின் உழைப்பினால்தான் இந்த அரசாங்கமே இன்று பதவியில் இருக்கிறது.

எனவே இன்றுள்ள கேள்வி—நாட்டைச் சூழ்ந்துள்ள இன்றைய பயங்கரமான பொருளாதார நெருக்கடி நிலையில்—அரசியல் சட்டரீதியாக தமிழ் இனத்தின் உரிமைகளை வழங்கி—தமிழ் மக்களின் அபிலாஷைகளை மதித்து தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்று—அரசு செயல்படப் போகிறதா?

அல்லது 'தமிழ் ஈழம்' தனியே பிரிந்து சென்று தனது சொந்த பொருளாதார, சமுதாய அமைப்பை வளமான முறையில் அமைத்துக்கொள்வதா என்பதுதான்!

அரசின் முடிவு எப்படி அமைகிறதோ—அந்த முடிவை யொட்டி தமிழ் தேசிய இனமும் இப்பிரச்சினையில் தனது முடிவைக் காண இன்று தயாராக இருக்கிறது!

## தமிழரசுகிளைகளுக்கு பொதுச்செயலாளர் வேண்டுகோள்!

தமிழரசுக்கட்சியின் மாவட்டக்கிளைகள் உடனடியாகக் கூடி பத்து உறுப்பினர்களுக்கு ஒருவர் வீதம் எதிர்வரும் 12 வது தேசிய மாநாட்டுக்கு பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறுகட்சிப் பொதுச் செயலாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. மாவட்டக் கிளைகளுக்கு அறிவித்துள்ளார்.

கட்சிப்பொதுச் சபைக்கு ஒரு தொகுதிக்கு ஐந்து பேர் வீதம் புதிய உறுப்பினர்களை பொறுக்கியெடுத்து அனுப்புமாறும் திரு. கதிரவேற்பிள்ளை மாவட்டக் கிளைச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் ஈழம்—தங்க ஈழம்'

அன்பு நண்பா,

பதுளை — எஸ். எம். சுப்பையா
கிடைத்த வாக்கு — 27, 121
பெரும்பான்மை — 10, 467

அலுத்நுவரை — டி. ராமானுஜம்
கிடைத்த வாக்கு — 2772
பெரும்பான்மை — 1437

பண்டாரவளை — கே. வி. நடராசா
கிடைத்த வாக்கு — 5,092
பெரும்பான்மை — 2195

கொட்டகலை — கே. குமாரவேலு
கிடைத்த வாக்கு — 6,722
பெரும்பான்மை — 3543

மஸ்கெலியா — ஜி. ஆர். மோத்தா
கிடைத்த வாக்கு — 9086
பெரும்பான்மை — 5137

நாவலப்பிட்டி — கே. இராசலிங்கம்
கிடைத்த வாக்கு — 7,933
பெரும்பான்மை — 1,442

நுவரெலியா — எஸ். தொண்டமான்
கிடைத்த வாக்கு — 9386
பெரும்பான்மை — 6135

தலவாக்கெல்லை — சி. வி. வேலுப்பிள்ளை
கிடைத்த வாக்கு — 10,645
பெரும்பான்மை —9,710

என்ன இது என்று திகைக்கின்றாய் ... இல்லையா? இந்நாட்டில் தமிழ் மக்கள் என்ன உரிமையை இழந்து விட்டார்கள் என்று சோற்றுலடித்த ஜடங்கள் சில இன்னமும் கேட்டு வருகின்றனவே — 'அவற்றுக்கு' புள்ளி விபரம் தருகின்ற பதில்தான் இது!

ஆம், நண்பா, 1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலின் போது மலையகத் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்தி எட்டு தமிழ் பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள் அல்லவா? அந்த எட்டுப் பேரும் அங்கத்துவம் வகித்த தொகுதிகளையும், அவர்களுக்கு கிடைத்த வாக்குகளையும், அவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற பெரும்பான்மையையும்தான் மேலே தந்திருக்கிறேன்!

இப்படி, சுதந்திரப் பிரஜைகளாக இருந்து — தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி — தங்கள் நலனைப்பேணுவதற்கென எட்டுத்தமிழ் உறுப்பினர்களை பாராளுமன்றம் அனுப்பக் கூடிய அரசியல் வலிமை படைத்திருந்த 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழ்ச் சகோதரர்கள்தாம் இந்நாட்டை வாழ வைக்கும் மனிததெய்வங்கள்தாம் — இன்றைக்கு அந்த உரிமையும் அரசியல் வலிமையும் பறிக்கப்பட்டு நடுத்தெருவில் நாதியற்றவர்களாக கைபிசைந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்திடும் போது, நம் சிந்தை, அணு ஒவ்வொன்றும் நம்மை அறியாமலே துடித்தெழுகிறது ... இல்லையா?

10 இலட்சம் மலைநாட்டுத் தமிழ் சகோதரர்களின் குடியுரிமை பறிக்கப் பட்டது; வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் நம்மவரின் மொழியுரிமை — ஆட்சியுரிமை — மதவுரிமை — தொழிலுரிமை — உத்தியோக உரிமை — கல்வியுரிமை — அத்தனையும் பறிக்கப்பட்டு, புதிய அரசியல் சட்டத்தின் கீழ் தமிழினம் இந்நாட்டில் அடிமை இனமாக்கப் பட்டுள்ள இன்றைய நிலையிலும் கூட — தமிழர்கள் என்ன உரிமையை இழந்து விட்டார்கள் என்று சிலர் கேட்கிறார்கள் என்றால் — அவர்கள் விளங்காத்தனமாகக் கேட்கவில்லை! விஷமத்தனத்துடன் தான் கேட்கிறார்கள்!!

தமிழினம் இன்று தனது உரிமைகளைக்கோரி புனிதப் போரில் குதித்திருக்கிறதென்றால் — புதிதாக எதையும் கேட்கவில்லை! இது நாள் வரை அனுபவித்து வந்து உரிமைகளை — சர்வதேச நியதிகளின் படி ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் சட்டரீதியான, நியாய ரீதியான உரிமைகளை — இழந்துவிட்ட உரிமைகளை — மீட்கும் போராட்டத்திலேயே குதித்திருக்கிறது!

சிங்கள இனத்துடன் சரி சமமான நிலையில் — சமத்துவ அந்தஸ்தில் ஓர் ஐக்கிய இலங்கையின் கீழ் ஒன்றுபட்டு வாழ்வதற்கு தமிழினம் எடுத்த அத்தனை முயற்சிகளும் சிங்களத்தலைவர்களின் அதிகார வெறியினால் - ஆதிக்கமமதையினால் — தூள் தூளாக்கப்பட்ட நிலையில் — இன்று தமிழ் மக்கள் தம்மை அழிவிலிருந்து காப்பாற்றிக்கொண்டு தனித்துவத்துடன் வாழ்ந்திட எஞ்சியிருக்கின்ற ஒரே வழி — தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் தமிழ் ஈழ சுயாட்சிக் குடியரசொன்றை நிறுவுவது தான் என்று சிந்தித்திடத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதுவும் கூட பிரிவினையோ — புதிய கோரிக்கையோ அல்ல!!

தமிழ் ஈழமும், சிங்களமும் தனித் தனி அரசுகளாக விளங்கவேண்டுமென்று கூறினால் — அது ஒருபோதும் பிரிவினைவாதமாகாது!

ஒன்றாக இருந்த நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும்படி கூறினால் அது பிரிவினைவாதம்! ஆனால் வரலாற்றுப்படி — ஒன்றாக இருந்த 'ஒரே' நாடல்ல—இலங்கை! அந்நியனால் தனது நிர்வாக வசதிக்காக ஒன்றாக (செயற்கையாக) இணைக்கப்பட்ட நாடு

## அரசியல் மேடை

தான், தமிழ் அரசும் சிங்கள அரசும், இறைமையும் சுயாதீனமும் உள்ள தனித் தனி அரசுகளாக இருந்துவந்துள்ளன என்பது வரலாறு கூறுகின்ற மறுக்க முடியாத உண்மை!

எனவே 'தமிழ்ஈழம்' என்கின்ற கோரிக்கை இன்று முன்வைக்கப்படுகிறதென்றால், அது பிரிவினையோ — புதிய கோரிக்கையோ அல்ல! இழந்துவிட்ட தனது ஆட்சியை இன்று மீண்டும் நிலைநாட்ட தமிழினம் முயற்சிக்கிறது— தனது சுதந்திரத்தை மீண்டும் ஸ்தாபிக்கப்போராடுகிறதுஎன்பதுதான் அர்த்தம்!

'தமிழ் ஈழம்' என்ற கோரிக்கை— சுதந்திர கோஷம்—எழுந்தவுடன் பலரும் பதறித்துடிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்; 'ஐயகோ' என்று மாரடித்துக்கதற தொடங்கியிருக்கிறார்கள்; 'தேசிய' பற்று இப்போதுதான் சிலருக்கு 'கொழுந்து' விட்டெரிய ஆரம்பித்திருக்கிறது!

சிங்கள ஆட்சியாளர் 'தமிழ் ஈழம்' என்கின்ற கோரிக்கையின் மீது எப்படி கொடூரமாக நடப்பார்கள் என்பது நாம் அறியாததொன்றல்ல —நம்மை அடக்கி ஆள விரும்புபவர்கள், எப்படி நம்மை நாமே ஆளும் நிலை தோன்றிட அனுமதிப் பார்கள்? எனவே சிங்களவர்களின் எதிர்ப்பு நம்மால் புரிந்துகொள்ளக் கூடியது—சந்திக்கப்படவேண்டியது!

ஆனால்—தமிழர்களில் சிலர்— எச்சில் இலைநக்கும் இளித்த வாயர்கள்— தமிழினத்தின் சுதந்திரக் குரலுக்கு குறுக்கே முட்டுக்கட்டை போட முயல்வது மட்டுமல்ல—வரலாற்றையே மறந்தும் மறைத்தும் பேச முற்பட்டிருக்கிறார்கள்!

சண்முகதாசன் என்பவர் (உணர்ச்சியினால் தமிழர் இல்லாவிட்டாலும்) பிறப்பினால் ஒரு தமிழர். இவர் ஒரு பெரிய கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார் சில நாட்களுக்கு முன்னர்! அது என்ன தெரியுமா? தமிழர்களால், தனி நாடோ, சுயாட்சியோ அமைத்திட முடியாதாம்!

ஆமாம், உண்மைதான்...சண்முகதாசன் போன்ற இன, மொழி உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக தமிழர்கள் எல்லோருமே இருப்பார்களானால் தனி நாடோ, சுயாட்சியோ, அமைத்திடுவது முடியாத காரியமாக இருக்கலாம்! ஆனால் தமிழர்கள் அனைவரும் சண்முகதாசன்கள் அல்லவே!!

தமிழர்கள் இந்நாட்டில், தனியரசு நடாத்தியவர்கள்—தனித்துவத்துடன் வாழ்ந்தவர்கள் என்ற வரலாற்று உண்மையைக்கூட மறந்து— அல்லது — மறைத்துவிட்டு — இப்படிப் பேசியிருக்கிறார் சண்முகதாசன் என்றால் இதன் அர்த்தம் என்ன? தமிழர்கள் கையாலாகாதவர்கள்—சுதந்திரத்தின் அருமை பெருமை தெரியாதவர்கள்—சுயபலம் இல்லாதவர்கள்—என்பதுதானே!

ஏன் தமிழர்களால் தனியாட்சி நடத்திடமுடியாது? தமிழ் ஈழம் ஏன் தனித்தியங்கிடமுடியாது? என்பதற்கு சண்முகதாசன் கூறிய காரணம் சிரிப்புக்கிடமானது—''இந்தியாபோன்ற பிற்போக்கு நாடுகளின் உதவியுடன் இதைச் சாதிக்க முடியாது'' என்பது தோழர் 'சண்'ணின் வாதமாகும்!

இந்தியா போன்ற 'பிற்போக்கு' நாடுகளின் உதவியுடன் தனிநாடு அமைக்க முடியாதென்றால் — சண்முகதாசனின் கருத்துப்படி, 'சீனா' போன்ற 'முற்போக்கு' நாடுகளின் உதவியுடன் அதனைச் செய்துமுடிக்கமுடியும் என்பதா தோழரின் கூற்று என்று நாம் கேட்போமா?

நண்பா, 'தமிழ் ஈழம்' அமைப்பதற்கு இந்தியாவிடமோ சீனாவிடமோ ஈழத்தமிழினம் கையேந்தி நிற்கவில்லை. தன் சொந்தபலத்தைநம்பி—அறமெனும் வாளை—கையிலேந்தியே களத்தில் இறங்கியிருக்கிறது!

மூன்றுபுறம் கடலுண்டு— அதிலே கத்துகின்ற முத்துண்டு பவளமுண்டு— மீனுண்டு; விரிந்து பரந்த நிலமுண்டு— அதிலே விளைகின்ற நெல்லுண்டு; விரும்புகின்ற உணவுவகை அத்தனையும் மெத்தவுண்டு; கரும்புண்டு சீனி தர; கடதாசி ஆலை, சிமெந்து ஆலை, இது போல் எண்ணற்ற ஆலைகளை நிறுவுவதற்கு வேண்டிய கனிவளமுண்டு— மூலவளமுண்டு; அந்நிய செலாவணியை அள்ளித்தருகின்ற எண்ணெய் வளம் இங்குண்டு; ஐந்துக்கு மேற்பட்ட அழகுமிகு துறைமுகங்கள் எங்களிடம் உண்டு—மூளை பலமுண்டு— உழைக்கும் சக்தியுண்டு — அறிவுப் பலமுண்டு எம்மக்களிடம்!! இத்தனையும் இன்னும் பல திறன்களும் இருந்திடும் போது—எம் தமிழகத்தில் — தமிழ் ஆட்சி ஏன் நின்று நிலைத்து உயர்ந்து விளங்கமுடியாது.

முடியும்—நன்றாக முடியும்— தமிழ் ஈழம் தங்க ஈழமாக மாறமுடியும்— தமிழ் ஈழத்தின் ஆட்சி தமிழர்களின் கரங்களுக்கு வரும்போது! 'தமிழ் ஈழம் தமிழர் தாகம்' எனும் ஒரே இலட்சியத்துடன் அந்நிலை கண்டிட உழைத்திடுவோம்— பைத்தியக்காரர்களின் பிதற்றல்களை ஒதுக்கிவிட்டு!!

உன், அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

## அமைச்சரின்... விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பாடுதானா — தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்காது, சிங்கள பௌத்தத்துக்கு முதலிடம் தரும் புதிய அரசியல் சட்டம்? அந்த நன்றியின் வெளிப்பாடுதானா தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக்கோரிக்கையை ஏற்க மறுப்பது? அந்த நன்றியின் வெளிப்பாடுதானா — புதிய குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை உருவாக்கி அப்பாவித் தமிழ் இளைஞர்களை தண்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்த அஹிம்சா வழியில் உண்ணாவிரதம் ஒன்றுதான் எமக்குள்ளஒரேவழி என்றும் தமிழ் இளைஞர் பேரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

---

டிக்க முயல்வது? வெறுமனே 'சீனி' என்று எழுதி[illegible] அது இனித்து விடாதென் பதை விளையாட்டுத்துறை அமைச்சரே! உணருங்கள்!

## இலட்சிய வெற்றி

''எந்தப்பெரிய இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்; அதைச் சாதிக்க எத்தனை பேர் முன்வருகிறார்கள் என்கின்ற எண்ணிக்கை முக்கியமல்ல — அதற்காக முன்வருவோர் எத்தகைய மனப்பாங்குடையோர் என்பதே வெற்[illegible] மாகும்.''

— காந்தியடிகள்


யோகக்கலை

'யோக பலத்திலும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும் கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை.'

—ரத்த மைத்ரேய.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி விளக்கப்படங்களுடன் கூடிய யோகக்கலை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'அடங்காத் தமிழன்' அமரர் நாகநாதன்

நாடாளுமன்றநடவடிக் கைகளை விமர்சிக்கும் ஆங் கிலச் செய்தி நிருபர் அமரர் நாகநாதனைப் பற்றி முன்பு குறிப்பிடும்போது வழக்க மாக அடைமொழியொன் றைப் பயன்படுத்துவர்— 'அடக்கமுடியாத' நாகநா தன் என்பர் அல்லது 'கட் டுங்கடங்காத' நாகநாதன் என்பர்.

உண்மைதான்; எதிர்ப்பு முனைகளையெல்லாம் எதிர் கொண்டு சென்று முட்டி மோதிச் சிதறடித்துப் பழகி விட்ட இந்தச் சிங்கம் கட் டுக்கடங்கியதில்லை தான். சுதந்திரவேட்கை சுவாலை விட்டுக்கொண்டிருந்த இந்த உள்ளம் சுற்றுமதில்களை ஓர் அறைகூவலாகவே கருதிற்று.

அரசியலரங்கில், மாற்று ரின் மட்டத்திலும்சரி பிரதி நிதித்துவப் பேரவைகளில் சட்டதிட்டங்களின் மட்டத் திலும்சரி, இரும்பு மனிதனை எவரும் அடக்கமுனைந்தது மில்லை; முனைந்தவர்களால் அது முடிந்ததுமில்லை. கட் சிக்குழுக் கூட்டங்களிலேயே இந்த 'அடங்காப் பண்பு' சில வேளைகளில் சங்கடங் களை விளைத்துள்ளதை கட் சித் தோழர்கள் அறிவர். முடங்காத மூச்சும் ஒடுங் காத உள்ளமும் நடுங்காத உறுதியும்கொண்ட இந்த அடங்காத தமிழன், ஆடி அடங்கி இன்றுடன் இரண் டாண்டுகள் ஆகிவிட்டன.

### அமர மலர்கள்

ஈழத்தமிழகத்தின் அரசி யல் சொல்லையிலே கள்ளி களும் காளான்களும் முட்டி முளைத்திருந்த காலமொன் றிருந்தது. வெற்றுச்செடி களும் விஷக்கொடிகளும் பற்றிப் படர்ந்திருந்து தமிழ் மண்ணைப் பாழாக்கிக்கிடந்த வேளையிலேதான், தலைமை யின் அருமையும் தமிழ்மண் ணின் பெருமையும் துலங்கு மாறு, வன்னியசிங்கங்களும், இராசவரோதயங்களும், நாகநாதன்களும், இன்னோ ரன்ன அருமையான மலர் களும் அங்கு அபூர்வமாக மலர்ந்தன. அற்புதமான கற்பக மலராகவும், சீரும் சிறப்பும்வாய்ந்த பாரிஜாத மலராகவும், சிந்தைக்கினிய மந்தார மலராகவும் தமிழ்ப் பூங்காவிலே கமழ்ந்திருந்த

இவ்வமர மலர்கள் எதிர் பாராத விதமாக வீசிய சாவென்னும்சண்டமாருதத் தால் இடையில் அடித்து வீழ்த்தப்பட்ட கொடுமை தமிழ் மண்ணின் சாபக் கேடாகுமா?

### தனிச் சிறப்பு

ஏனைய தலைவர்களிலிருந்து டொக்டர் நாகநாதனின் சிறப்பை தனியாக இனங் காண நான்முற்படுவதுண்டு. அதற்குக் காரணமுமுண்டு. அமரர் நாகநாதனின் இள மைக்கால வட்டிலும் சோறும், தொட்டிலும் கட் டிலும் தமிழ் மண்ணுக்கு உரியனவல்ல. அவரின் பிறப் பும் வளர்ப்பும். பள்ளியும் படிப்பும், தொழிலும், தோழமையும், சுற்றமும் சூழலும், தமிழ்த் தளத்தி லானவையல்ல.

தமிழ் மண்ணுக்கு வெளியே, தாராளமான சிங்காரமான செழிப்பான வாழ்வைக் கண்டிருக்கக் கூடியவர் அவர்.

''மானிட வாழ்வு பெரும் ஆனந்தம்'' என ஏழிசை மன்னர் தியாகராச பாக வதரின் அசோக்குமார் எடுப்பிலே இறுதிவரை வாழ்ந்திருக்கக்கூடியவர்; இன்னும், இன்றும்,வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்; ''பஞ்சமும் நோயும் உன் மெய்யடியார்க்கோ'' என்ற பாரதியப் பாணிப் புலம் பலுக்கு அவர் இலக்காகி யிருக்கவேண்டியதில்லை. இருப்பினும், தென்றலும் தெம்மாங்கும் அணுகாத் தும் தீவினைக்கே இலக்கான துமான திராவிட சம்பத்தில் அமரர் நாகநாதன் பங்கு கொள்ள வந்தது, எதனால்? தடுமாற்றத்தாலோ திடீர் மாற்றத்தாலோ அல்ல; ஏமாற்றத்தாலோ மனமாற் றத்தாலோ அல்ல; அசல் இனவுணர்வால்— தான் தமி ழன் என்ற உரிமையால் — விடுதலை வேட்கையால்.

டொக்டரின் உதட்டிலே தமிழ் சரளமாக உறவாட வில்லை என்பது உண்மையே; ஆனால், அவரின் உணர் விலும், உள்ளத்திலும் உதி ரத்திலும் தமிழன் என்ற வேட்கை உறைந்திருந்தது. தவிரவும், இளமையில்



டொக்டரின் உடன் கால உறவுகள் அந்நியமாயிருப் பினும், அன்னாரின் தந்தை யரும் தமிழ்த் தளத்தில் காலூன்றி நின்றவர்கள். அமரர் நாகநாதனின் பாரம்பரியம் தமிழ்ப் பாரம் பரியமே.

### பாரம்பரியம்

1970 ஆம் ஆண்டுத்தேர் தலின் போது திருநெல் வேலியில் நடைபெற்ற டொக்டரின் கூட்டமொன் றில் பங்குகொள்ளச்சென்றி ருந்தேன் அதற்கு முதல் நாள் அதே இடத்தில் மாற் றுக் கட்சியினரின் கூட்டம் நடைபெற்றிருந்தது. நல் லூர் தொகுதியில் கத்தோ லிக்கரான நாகநாதன் எங்க னம்வெற்றிபெறலாம் என்ற படு பிற்போக்குத்தனமான மிலேச்சவாதத்தை அங்கு எழுப்பிய மாற்றுக்கட்சியின் வழக்குரைஞரான பேச்சா ளர் ஒருவர், அமரர் நாக நாதனின் முதல் எழுத்துக் களான ஈ. எம். வி. என் பவை இமானுவல் மைக் கல் விக்டர் என்ற பெயர் களைக் குறிப்பனவாகவும் தமது மிலேச்சவாதத்துக்கு ஆதாரமாகக் கூறியிருந்தா ராம். இதனைக்கட்சி நண்பர் கள் என்னிடம் கூறி பதில் கொடுக்குமாறு கேட்டனர். இம்மானுவலும், மைக்க லும், விக்டரும் தமிழர்களா யிருக்கும் வரை அவர்கள் பெயர்கள் என்னவாயிருந்

**கரிகாலன்**

தாலென்ன என்ற கேள்வி ஒருபுறமிருக்க, ஈ. எம். வி. என்ற எழுத்துக்கள் இலங்கை, முருகேச விசய ரத்தினம் என்றபெயர்களைக் குறிப்பதை அங்கு கூறி னேன்.

அமரர் நாகநாதனின் பாரம்பரியம் எத்தகைய செல்வாக்குக்கு ஆட்பட் டது என்பது தெளிவானது. தமிழ் மண்ணின் பெருச் சாளிகள் சிலரின் தோற்று வாய்த் தோம்புகளைக் கிளறி னால் என்னென்ன வமிசங் கள் வெளிவருமோ!

### சின்னத்தனம்

'சின்னத் தனத்துடன்' இணங்கி வாழ மறுத்தவர் இரும்பு மனிதர். குறுகிய கண்ணோட்டமும் சிறுமை யான சிந்தனையும் அன்னா ரின் பெரிய மனதின் பெரும் பகைப் புலங்களாயிருந்தன. உதாரணமாக ஒரு நிகழ்ச்சி யைக் கூறுவதாயின்: 'தேசிய' அரசாங்கம் என்ற விசித்திரமான ஒரு விலாங்கு ஆட்சியில் காலஞ் சென்ற இரியகொல்லையும் அமைச்ச ராக இருந்தார். இலஞ்சம், ஊழல், ஒரவஞ்சனை, பாரபட்சம், சின்னத்தனம் இவற்றின் சின்னமாக விளங்கிய இவரை டொக்டர் மனதார வெறுத்தார். ஆட்சியில் பங் காளர்களாக —என்னைப் பொறுத்தவரையில் ஏதோ துர்ப்பாக்கியவசமாக,—தமி ழரசுக்கட்சியினர் இருந்த போதிலும், இரியகொல் லைக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவுதர அமரர் நாக நாதன் மறுத்தார். உயர் கல்விக்கான தேசிய சபை யொன்றை அமைத்தற்கு இரியகொல்லை ஒரு சட்ட மூலத்தை நாடாளுமன்றத் தில் கொண்டு வந்தார். அதன் மீது பேச முற்பட்ட டொக்டர், 'உயர்ந்த கல் வியை மேம்படுத்தற்காக குறைந்த கல்வியுடைய ஒரு மனிதரால் கொண்டு வரப் பட்ட இச்சட்டமூலம்...' என்ற முன்னுரையுடன் தொடங்கினார். இதற்காக இரியகொல்லை நாகநாதனை என்றும் மன்னித்ததில்லை.

### அடியார்க்கு அடியார்:

அரசியல் வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் டொக்டரின் அணைப்பிலே அன்னாரின் வளர்ப்பு மகன் போன்று வளர்ந்து வாழ்ந் திட்ட என் போன்றோருக்கு, அமரரின் அறிமுகம் மிகவும் அருமையானது; அன்ன வரின் நினைவு மிகவும் இனி மையானது; அவரின் பிரிவு பெரிதும் துயரமானது.

இதனை எழுதும்போது தனிப்பட்ட அனுபவங்கள் சிலவற்றின் கண்டிப்போன நினைவுத் தழும்புகளைத் தட விப் பார்த்துக்கொள் கிறேன். மிலேச்சச் சக்திகள் சிலவற்றினால் எவக்கேற் பட்ட வேதனைகளில் பங்கு கொள்ளவும் சோதனைகளைச் சமாளிக்கவும் விரைந்தோடி வந்திட்ட பாரியதொரு சக்தி அமரர் நாகநாதன்; தனிப்பட்ட முறையில் எனது விரோதிகளாகவன்றி, தமிழி னத்தின் பொதுப்பட்ட விரோதிகளான இம்மிலேச் சச் சக்திகள் யார் — அவற் றைப்பற்றிய சங்கதிகள் எவை—என்பதுபற்றி காலம் கனியும்போது விரிவாக எழுதுவேன். தமிழினம் இவர்களை அடையாளம் காண்பது மிகவும் அவசிய மாகும். அமரர் நாகநாத

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆள்பிரட்(டி) துரையப்பரின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடட்டுமாம். இப்படிக் கூறு வதற்கு இவர் யார்? நாட் டின் பிரதமரா? அல்லது அரசகரும மொழித் திணைக் களத்துக்கு பொறுப்பான அமைச்சரா? அல்லது தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரம் இவரி டம்தான் கையளிக்கப்பட்டு இருக்கிறதா?

யாழ்ப்பாணம் மாநகர சபைதான் இலங்கை அர சாங்கம் என்று நினைத்துக் கொண்டு குண்டுச் சட்டிக் குள் குதிரை விடுகிறாரா துரையப்பா?

நாள் தோறும், தமிழில் அரசாங்கத்துக்கு எழுதும் கடிதங்களுக்கு சிங்களத் திலேயே பதில் வந்துகொண் டிருக்கின்றன. இதனால் செய் வதறியாது திகைத்து நிற் கிறார்கள் தமிழ் குடிமக்கள் இது சர்வசாதாரணமாக தினசரி நடக்கின்ற நிகழ்ச்சி யாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் கள் தமிழில் எழுதும் கடிதங் களுக்கே கூட சிங்களத்தில் பதில் அனுப்பப்படுகிறது. இதைஎத்தனை முறை சுட்டிக் காட்டி விட்டார் பண்டிதர் இரத்தினம்!

யாழ் மாநகர சபைக்கே தமிழ்க் கடிதங்களுக்கு சிங் களத்தில்பதில்வரவில்லையா? வந்து மொழி பெயர் புக் கோரி அவற்றைத் திருப்பி அனுப்பவில்லையா?

ஆங்கிலம் தெரிந்தஒருவர், தமிழில் அரசுக்கு கடிதம் எழுதினால் — அவருக்கு தமி ழில் பதில் தரமாட்டேன். ஆங்கிலத்திலேயே அனுப்பு வேன் —என்று தந்தை செல் வாவிடம் அமைச்சர்பீலிக்ஸ் அடித்துச் சொன்னது தமிழ் மக்களுக்கு இன்னும் மறந்து விடவில்லை.

துரையப்பா கூறுவதுபோல் — தமிழ்க் கடிதங்களுக்கு அரசு தமிழில் பதில் தராது — மொழி பெயர்ப்புத்தான் தருவதாக வாயளவில் கூறுகிறது. ஆனால் நடைமுறையிலோ மொழிபெயர் ப்புக்கூட இன்றி தனிச்சிங்களத் திலேயே கடிதங்கள் அமைச்சுக் களிலிருந்தும் அரசாங்க திணைக் களங்களிலிருந்தும் தமிழ் மக் களுக்கு நாள் தோறும் செல் கின்றன.

### யாழ் மாநகரசபை தீர்மானம் என்னாயிற்று?

தமிழினம் இழந்துவிட்ட உரிமைகள் எதுவுமில்லை யாம் — கூறுகிறார் ஆள் பிரட்(டி)! இப்படிப் பேசு பவர்கள் உண்மையில் தங் கள் சுய அறிவுடன் தான் பேசுகிறார்களா என்று நமக்கு சந்தேகம் ஏற்படு கிறது.

இதே துரையப்பாவும், அவரது யாழ் மாநகர சபை யினரும் தான ஐக்கிய நாடு கள் சபையின் மனித உரிமை சாசனத்தில் கூறப்பட்டுள்ள உரி காரம், புதிய அரசியல் சட் டத்தில் தமிழர்களின் உரி மைகள் வழங்கப்படவேண்டு மென்று ஒன்றுக்கு இரண்டு தடவை தீர்மானம் நிறை வேற்றி அனுப்பி வைத்தவர் கள் என்பதை தமிழ் மக்கள் அதற்குள் மறந்துவிட்டார் கள் என்று துரையப்பா நினைத்துக்கொண்டாரா?

துரையப்பாவும் யாழ். மாநகர சபையும், தமிழினம் எந்த உரிமைகளையும் இழக்க வில்லையென்றால் எதற்காக இப்படியொருதீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத் தார்களாம்?

யாழ். மாநகர சபையின் தீர்மானத்தை அரசு அலட் சியப்படுத்தி குப்பைக் கூடைக்குள் கசக்கி வீசிய பின்னும் மானம் ரோச மின்றி ஆள் பிரட்(டி) துரை யப்பா அரசை விழுந்து நக்கு கிறாரென்றால்— தமிழினமும் அப்படி நக்கவேண்டுமென்று துரையப்பா எதிர் பார்க் கிறாரா?

எனவே துரையப்பா வாயில் வந்ததைப் பேசி, வாணவேடிக்கைகளைக் காட்டி தம்மை 'பபூன்' ஆக் கிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளு கிறோம்.

அவர் தாராளமாக ஆட்சி யாளரை விழுந்துநக்கி தம் வயிற்றைத் தாராளமாகக் கழுவிக்கொள்ளட்டும்ஆனால் தமிழினத்தின் உரிமைப்பிரச் சினைகளில் தலையிட்டால், தமிழினம் நிச்சயம் சகித்துக் கொள்ளாது என்பதை மட்டும் இங்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

## காங்கேசன்துறை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் சார்பில் போட்டி யிட்டு வெற்றிபெற்றீர் களோ - அந்தக் கட்சியின் முதுகில் குத்திவிட்டு, உங் கள் காலடிக்குவந்த துரோகி கள்-பி. ஆர். செல்வநாய கம்,யூ. என்.பி. ஆதரவுடன் வென்று, யூ. என். பி. ஆட் சிக்கு வராததால், சமசமா ஜக்கட்சிக்குத்தாவி பின்னர் உங்களுடன்-நீலச் சட்டையு டன்வந்து ஒட்டிக்கொண்ட வர்.இப்படிஏற்றுக்கொண்ட கொள்கைக்கும், கட்சிக்கும் துரோகம் புரிந்தவர்கள் தான் 'நியாயமான தமிழர்' களாக உங்கள் கண்களுக்கு படுகிறதா?

அப்படியானால், 1964ம் ஆண்டு உங்கள் ஆட்சியை கவிழ்த்துக்கொட்டிய சி. பி. டி. சில்வாவை, ஒரு 'நியாய மான சிங்களவர்' என்று நாம் கூறினால் நீங்கள் ஏற் றுக்கொள்வீர்களா?

### ஏன் பயப்படுகிறீர்கள்?

தமிழர்களில் 'நியாயமான பேர்' ஒற்றையாட்சியை ஏற் றுக்கொண்டுவிட்டார்கள் என்று அந்தரங்கசுத்தி யாக, நீங்கள் கருதினால், காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடததி—தந்தை செல்வாவை தோற்கடித்து உங்கள் வெற்றி வீரத்தைக் காட்டலாமே! ஏன் இடைத் தேர்தலை நடத்த அஞ்சி நடுங்குகிறீர்கள்?

செல்வா யாரைக்கேட்டு ராஜினமா செய்தார் என்ப தும் அமைச்சரின் ஒரு கேள்வி! கேட்கவேண்டிய வர்களை — தமது கட்சியை— மக்களைக் — கேட்டே அவர் தமது பதவியைத்துறந்தார். பதவி துறப்பதற்கு அரசாங் கத்தையோ, அமைச் சரையோ அவர் கேட்க வேண்டியதில்லை. அது அவரீ உரிமை—ஜனநாயக உரிமை.

தேசிய பேரவை உறுப்பினர் ஒருவர் பதவி விலகினால் அவர் பதவி விலகிய மூன்று மாதங் களுக்குள் இடைத்தேர்தலை நடத்தவேண்டியது அரசாங்கத் தின் கடமை. புதிய அரசியல் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள், அச்சட் டம் கூறுவதை மதித்து இடைத் தேர்தலை நடத்துவது ஜனநாய கக் கடமை!

அந்தக்கடமையை செய் யாது ஜனநாயகத்தையும் புதிய அரசியல் சட்டத்தை யும் அவமதித்துவரும் ஆட்சி யாளர்கள் இடைத்தேர்தலை வைக்காததற்கு ஆயிரம்பொ ய்க்காரணங்களைகூறித் தமிழ் மக்களின் வெறுப்பை வளர் த்து வருகிறார்கள்.

என்றோ ஒரு நாள் இடைத் தேர்தலை இவர்கள் வைக்கத் தானே வேண்டும்! அப் போது இதற்கெல்லாம் வட் டியும் முதலுமாகச் சேர்த்து தங்கள்வாக்கு சீட்டுக்களால் செருப்படி கொடுக்கக் காத் திருக்கிறார்கள் காங்கேசன் துறை தமிழ் மக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (22)

மனித சமுதாயத்தின் பலவீனங்கள் என்று பார்க்கப் போனால் அதில் முதலிடம் வகிப்பது சுயநலம். உயர்ந்த அந்தஸ்து, பட்டம் பதவி, பணம் உள்ளவர்களை ஓடிச் சென்று வரவேற்பதும் அதே சமயம் அவர்கள் தனி மனிதராய் பணம், அந்தஸ்து ஏதுமின்றி குண நலப்பண்போடு வாழ்ந்தாலும் திரும்பிப் பாராது போவதும் நமது சமுதாயத்தைப் பிடித்துள்ள ஒரு கொடிய நோய். கடைந்தெடுத்த சோசலிசம் பேசுபவன் கூட இந்த விதிக்கு விலக்காக இருக்க மாட்டான். வாசுதேவனுடைய அந்தஸ்து உயர்ந்தபொழுது அவனை உறவினன் நண்பன் என்று கூறப் பயந்தவர்கள் எல்லோரும் இப்பொழுது உறவுமுறை கொண்டாட முன்வந்திருந்திருந்தனர். ஆனால் அன்று அப்படி யாரும் வந்திருக்கவில்லை. சுகுணாவே வந்திருந்தாள்.

'ஹலோ சுகுணாவா? என்ன விசேடம்? கல்யாணமா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் வாசுதேவன்.

'கரெக்டா சொல்லிவிட்டீங்களே! இருந்தாலும் பதவிக்கேற்ப மூளை வேலை செய்யும். இல்லையா அண்ணா?'

'உண்மைதான் சுகுணா. ஆனால் நீ வந்த தோரணை, உன் முகத்தில் தெரியும் பிரகாசம் இவைகளைக் கொண்டே கணக்கிட்டேன்.'

'எப்படியோ நீங்கள் இங்கு இருப்பது பற்றி நேற்றுமாலையே அறிந்தேன்டு தினம் தினம் நீங்கள் எங்கே இருப்பீர்கள் என்று எண்ணி வருத்தப்பட்டேன் கட்டாயமாக வருவீங்கள் தானே அண்ணா?'

'நிட்சயமாய் வருவேன். அம்மா! இதோ சுகுணா வந்திருக்கின்றாள். கோப்பி, பலகாரம் கொடம்மா அவள் கல்யாணப் பெண்ணாக வந்திருக்கின்றாள்.'

உள்ளேயிருந்து வந்த வாசுதேவனின் தாயின் காலில் விழுந்து வணங்கினாள் சுகுணா அவளைத் தொட்டுத் தூக்கி, 'என்றுமே சந்தோஷமாக வாழ இறைவன் அருள் கிடைக்கட்டும்.' என்று வாழ்த்தினாள் பாக்கியம்மாள். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சித்திராவுக்குத்தான் அங்கே அவர்களோடு எப்படியெல்லாமோ பழகிவிட்டு, கல்யாணத்தின் போதும் அதன் பின்பும் நடந்துகொண்ட முறைகளை நினைத்தபொழுது கதறி அழுது கொண்டு பாக்கியம்மாளின் கால்களில் விழுந்து அப்பாதங்களைக் கண்ணீரால் கழுவ வேண்டும் போல் இருந்தது.

'உங்கள் பிள்ளை என்னுடன் பிறக்காவிட்டாலும், என் உடன் பிறந்த அண்ணனை விட மேலாக மதிப்பு வைத்துள்ளேன். அவரால் என் வாழ்வில் ஒரு பெரிய திருப்பமே ஏற்பட்டதம்மா. அண்ணா இதை எல்லாம் வீட்டில் சொல்லியிருக்க மாட்டார். இவர் இன்று பெரிய பதவியிலிருக்கலாம். இப்பதவியெதுவுமின்றி வீட்டில் இருந்தாலும் இதே மரியாதை கொடுத்தே அழைத்திருப்பேன்.' என்றாள் சுகுணா.

அவளுடைய ஒவ்வொரு சொல்லும் சித்திராவுக்குச் சாட்டை அடி கொடுப்பதாகவே அமைந்திருந்தது. எனினும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சுகுணா விடைபெற்றுச் சென்ற பின்பும் சித்திரா மௌனமாகவே இருந்தாள். அவளுடைய மனநிலையைப் பற்றி என்ன கூறுவதென்றே புரியவில்லை வாசுவுக்கு. அவளுக்கு எதிரேயுள்ள நாற்காலியில் அமர்ந்தான்.

'என்ன சித்திரா மௌனமாக இருக்கின்றாய்?' சிரித்தபடியே கேட்டான் வாசுதேவன்.

'அழுவதா? சிரிப்பதா? என்று தெரியாத நிலையில் வேறு என்னண்ணா செய்வது?'

'கவலையே இல்லாமல் திரிந்த உனக்கு அப்படி என்ன வந்தது?'

'இனி என்ன வரவேண்டும்?'

'சித்திரா! ஒவ்வொருவருக்கும் எப்பொழுது என்ன நடக்கவேண்டுமோ அப்பொழுது அது நடந்தே தீரும் அதை நீரோ நானோ தடுக்கவோ நிறுத்தவோ முடியாது.'

'அண்ணா! இப்போ வந்து போனாளே சுகுணா. அவளைப் பற்றி நீங்கள் கூறியவை எனக்கு ஞாபகமிருக்குஅவள் இன்று என்னமாதிரிக் கூறினாள்! ஆனால் நான் எப்படி இருந்தேன்? இன்று என்னை நானே அறிமுகப்படுத்துமளவுக்குத் தாழ்ந்து போய் உங்கள் முன் நிற்கின்றேன். அது எப்படி ஏற்பட்டது? என்னுடைய அற்பத்தனத்தினால்தானே? அதனால்தான் தான் அண்ணா வருந்துகின்றேன்.' அவளுடைய விழிகளில் இருந்து நீர்முத்துக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன.

'பைத்தியக்காரி! இனி நினைத்து என்னபயன்? நீ செய்த தவறை உணர்ந்து கொண்ட பொழுதே மன்னிக்கப்பட்டாய். கடவுள் மனிதருடன் சிலசமயங்களில் விளையாடி வேடிக்கை பார்க்கின்றார். எனக்கு டியூட்டிக்கு நேரமாகுது. நீ வீட்டுக்குப் புறப்படவில்லையா?' என்று எழுந்து நின்றான்.

'அண்ணா' என்று கூறிக்கொண்டு எழுந்தவள் ஓடிச்சென்று அவனைக் கட்டிக்கொண்டு, 'நான் எதுவும் அறியாத பேதை என் தவறுகளை மன்னித்து விடண்ணா.' என்றாள்.

'பைத்தியம், எனக்கு உன்னில கோபம் என்று யார் சொன்னது? சித்திரா! நான் உன்னை வெறுக்கவில்லை. நீ யோசிக்காதே. வீட்டுக்குப் போய் நேரம் கிடைக்கும் பொழுது இங்கே வா என் வீட்டுக்கதவுகள் உனக்கு என்றும் திறந்திருக்கும். என் மனக்கதவும் திறந்திருக்கும்.' என்றான்.

'இந்த நல்ல மனம் காக்கி உடுப்புக்குள் அகப்பட்டு மறைந்து போச்சோ என்று பயந்தேன். இனி மகிழ்ச்சியோடு போவேன் அண்ணா.' என்று கூறியவள் பாக்கியம்மாளிடமும் விடைபெற்றுப் புறப்பட்டாள்.

முரட்டுச் சுபாவம் உடையவர்கள் தாம் எடுத்துக் கொள்ளும் காரியத்தை முடிப்பதற்கு முயற்சிப்பார்கள். அது முடியாத பட்சத்தில் அதற்குத் தடையானவற்றை முறியடித்து முன்னேறவோ அல்லது அதை அழித்தொழிக்கவோ நினைப்பார்கள். ஆனால் [illegible] கள் விடயம் அப்படியல்ல. எதிர்ப்பார்கள் தம[illegible] புச் சக்திக்கு எதிர்ச்சக்தி மிஞ்சியிருந்தால் அதை எந்த வழியிலாவது முறித்து முன்னேறும் குள்ள வழிகளையே தேடுவார்கள்.

நமது தொடர்கதை

அத்தகைய குணம் கொண்ட குறுக்கு மனமுடையவன் ரமேஷ். மனைவியே தங்கையுடன் சேர்ந்து கொண்ட பொழுது தனது எதிர்ப்புப் பலிக்காது என்று புரிந்து கொண்டான். அதற்கேற்ற முறையில் அவர்களின் திட்டத்தை முறியடித்துத் தனது திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று எண்ணியவனாக, எதுவும் அங்கு நடவாதது போன்று சந்தோஷமாகவே திரிந்தான். கவிதாவும் எப்பொழுதும் போன்று கலகலப்புடனேயே பழகினாள்.

ஒரு நாள் வெளியூர் போய்த் திரும்பி வந்து கவிதாவின் கையில் ஒரு லட்ச ரூபாய்நோட்டுக்கற்றைகளையும், இரண்டு லட்ச ரூபாய் பெறுமதியான வைரங்களையும் கொடுத்தான் ரமேஷ்.

'என்னத்தான் இவ்வளவும்——' கவிதா ஆச்சரியப்பட்டாள்.




'உனக்கேதான் என்னுடைய பிஸ்னஸில் கிடைத்த பங்கு. இந்த 'டைமன்ஸ்'சை விற்றால் மூன்று இலட்சம் தேறும். பணமாக வைத்திருந்தாலும் கரைச்சல். இது இப்படியே இருக்கட்டும் கவிதா.'

'உங்கள் விருப்பம்.'

'ஏன் உனக்கு விருப்பமில்லையா?'

'நான் வேறு நீங்கள் வேறா?'

'என் விருப்பத்துக்கு நீயும் உன் தங்கையும் விரோதிகளாச்சே.' என்று சிரித்தான்.

'நீங்கள் அப்படி நினைப்பதே தவறு அத்தான். அவளுடைய மனதுக்குப் பிடித்தமானவனை அவள் திருமணம் செய்து கொள்வதற்கு நாம் ஏன் குறுக்கே நிற்பான்? அப்பா இருந்தால் நாம் நினைத்தபடி செய்யலாம். இப்பொழுதோ அவளுடன் எதுவும் பேச முடியாது. அவளிஷ்டத்துக்கு விட்டுக் கொடுப்போமே.'

'பைத்தியக்காரி! உன் தங்கை நாளைக்குக் கெட்டுச் சீரழிந்தால் அதில் எமக்குப் பங்கில்லையா? நீதான்சும்மா இருப்பாயா? எலக்கென்ன? அவள் தன் இஷ்டப்படி செய்யட்டும் ஆனால் அதுவும் நடக்காதே. இவளைக் காதலித்தவன் எங்கோ போய் விட்டான். இவளோ ஆண்டாள், யோலப் பூசை செய[illegible] இலட்சணமா இது? சுரேஷ் [illegible] ஆயிரம் பெண்கள் கியூவில் நிற்பாளவை ஆனால் நான் அவனை எங்கள் குடும்பத்துள் மடக்கிவிடலாம் என்று நினைத்தேன். முடியலை உங்கள் இஷ்டப்படி நான் வாரேன். அவ்வளவுதானே' என்றான்.

அவர்கள் உரையாடலை அடுத்த அறையிலிருந்த ராதாவும் கேட்டுக்கொண்டு இருந்தாள். ரமேஷின் போக்கில் அவளுக்கு நம்பிக்கை இல்லையாயினும் 'சனி விட்டது' என்று திருப்தி அடைந்தவளாக இருந்தாள். ஆனால் அவன் கூறிய விடயத்திலும் உண்மை இருப்பதை உணர்ந்துகொண்டாள். வாசு எங்கே போனான்? அப்புறம் ஓர் கடிதமாவது போட்டானா? தாயின் விருப்பப்படி வேறு திருமணம் செய்து கொண்டானோ? இலவுகாத்த கிளிபோன்று தான் மட்டும் காத்திருந்து தன் வாழ்நாளை வீணாக்கிய பின்பு ஏமாந்து போக நேரிடுமா? என்ற பயங்கரச் சிந்தனைகளில் உழன்றுகொண்டிருந்தாள்.

அதே சமயம் கவிதாவின் மனதைத் தன்பால் கவர்ந்து கொண்டிருந்தான் ரமேஷ். பெண் மனம் மென்மையானது. அதனால்தான்அவர்கள் சபல புத்திக்காளாகுகின்றனர். பணத்தையும வைரத்தையும் பார்த்த பொழுது அவள மனம் பேதலித்து விட்ட தென்பதைப் புரிந்து கொண்ட பொழுது ரமேஷ் 'பிறெயின் வாஷ்' முறையில் அவளுடைய எதிர்காலம் பற்றிய இன்பக்கனவுகளில் அவளை மிதக்கவிட்டுத் தன் எண்ணத்துக்கு அவளை இசையச் செய்து, அவள் உடல் உணர்வுகளில் கிளுகிளுப்பை ஏற்படுத்தித் தன்னை நல்லவனாக்கி அவளை நம்பவைக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டான்.

'கவிதா! நீயே சொல். நான் இவ்வளவு கஷ்டப்படுவது உங்கள் குடும்ப நன்மைக்காகவா அல்லது என் சுயநலனுக்காகவா?'

'எனக்குத் தெரியும் அத்தான்.'

'கவிதா! நான் வெளிநாடு சென்று வந்தவன். உன்னையும் கூட்டிக்கொண்டு லண்டன் ரோம், பாரிஸ் என்று உலகமெல்லாம் சுற்ற வேண்டும். அந்த ஆசைகளையெல்லாம் உனக்குச் சொல்லாமல் செய்து காட்டலாம் என்று நினைத்தேன். நீயும் அவளோடு சேர்ந்து கொண்டு என்னைத் தப்புக் கணக்குப் போட்டிட்டியே. நாங்கள் அப்படி வெளி நாடுகளுக்குப் போகும் பொழுது உன் தங்கைக்கு மனம் கொதிக்காதா அதனால்தான் அவளுக்கும் அப்படி ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்க நினைத்தேன். கவிதா! பணம் இருந்தால் மட்டும் போதுமா? அப்படியான வசதிகளும் வந்தமைய வேண்டுமே.'

'நீங்கள் சொல்வது சரிதான். அதை அவள் உணராத பொழுது நான் என்ன செய்ய முடியும்? அவளிஷ்டப்படி நடக்கட்டும். உங்களை நான் நம்புகின்றேன் அத்தான்.'

'அது சரி கவிதா, அவள் யாரைத் திருமணம் செய்தாலும் எனக்கு அக்கறையில்லை. விரைவில் செய்து கொள்ளட்டும். அவ்வளவுதான்' என்றான்.

இதே மகிழ்வுடன் ஒரு வாரம் கழிந்தது. ராதாவுக்கு வேறு கவலையில்லையாயினும் வாசுவைப் பற்றிய கவலை இருந்தது. அன்று மாலையில் ராதாவின் கல்லூரித் தோழிகள் சிலர் அங்கே வந்தனர். அவர்களுடன் சந்தோஷமாகக் கதைத்துக் கொண்டேயிருந்தாள்ராதா கதை நடுவில் ஒருத்தி 'ஏன்டி ராதா நீ திருமணம் செய்து கொள்ளாமலிருக்கின்றாய்?' என்றாள்.

'உனக்குத் தெரியாத மாதிரிக் கேட்கின்றாயே புவனா' என்றாள் மற்றவள்.

'அடடே நான் மறந்திட்டேன். ராதா! கல்லூரி வாழ்வே அலாதிதான். நான் கூட மாதவனைக் காதலித்தேன். இப்போ வேறு ஒருத்தருக்குக் கல்யாணம் நிட்சயமாயிட்டுது. அதனால் என்ன? வாசு திருமணம் செய்திட்டான். அவன் இல்லையென்றால் இனி நீ திருமணமே செய்யப் போவதில்லையா? இப்படி ஒவ்வொருத்தியும் நினைச்சால் உலகம் என்னாவது?'

'வாசு கல்யாணம் செய்...' என்று ராதா கேட்டாள்.

'ஜேஸ், நான் மூன்று நாளைக்கு முன்புகூட அவர் மனைவியோடு காரில் போனதைக் கண்டேன்.' என்று அவள் கூறிய பொழுது ராதாவுக்கு உலகமே சுழலுவது போன்றிருந்தது.

## அவளும்

### ஒன்றுக்கு இரண்டு...!

சென்றவார சுதந்திரனில் 'ஆளுங்கட்சி அடிவருடிகளுக்கு குப்பிழான் இளைஞர்கள் சார்பில் ஒரு சவால்' என்று தேவன் —குப்பிழான் எழுதிய ஒரு கட்டுரை பிரசுரமாகிய தல்லவா? அதைப் பார்த்த குப்பிழான் அடிமையொன்று, அந்தக் கட்டுரையை எழுதியவரை, யாருடனோ கதைத்துக்கொண்டிருக்கும் போது பின்புறமாக வந்து தாக்கினாராம். அது மட்டுமல்ல சனசமூக நிலையத்தில் போடப்பட்ட சுதந்திரனையும் தாறுமாறாகக் கிழித்தெறிந்து 'இனிமேல் சுதந்திரன் ச. ச. நிலையத்தில் போட முடியுமா? என்று சவாலும் விட்டாராம். அவரது சவால் விட்ட அடுத்த 15 நிமிடத்துக்குள் ஒன்றுக்கு இரண்டு சுதந்திரன் போடப்பட்டது 'சுதந்திரன்' பத்திரிகையை சனசமூக நிலையத்துள் இருந்து எடுத்துக் கிழித்தவையிட்டு அவர் மீது விளக்கம் கோரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சன சமூக நிலைய நிர்வாகம் உறுதி தெரிவித்துள்ளது.

---

### அடங்காத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னின் அசுரவலி மட்டும் துணை நின்றிராவிட்டால் என்போன்ற சாமானியர்கள் கருவறுக்கப்பட்டிருப்பர். இரும்பு மனிதனின் துணை என் வரைத்தன்று. எளியோர்கள் எத்தனையோ பேரின் நியாயமான போராட்டங்களை வலியோர்கள் முறியடிக்க முற்பட்ட வேளைகளில் துணைநின்ற தோழன் அமரர் நாகநாதன். அவர் தொண்டர்க்குத் துணைவர்—அடியார்க்கு நல்லார்—அடியார்க்கு அடியார்—அடிப்பார்க்கு மரய அடி அடிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


3வது வாரமாக காட்சியளிக்கிறது

ஈரோஸ் சென்ட்ரல் ராணி

பாமன்கடை கொழும்பு யாழ்ப்பாணம்



சிவாஜி, கே. ஆர். விஜயா, மனோரமா, எம். ஆர். ஆர். வாசு, சோ, சகுந்தலா நடித்த

தமிழ்நாட்டில் 100 நாட்கள் ஓடிய

# தவப் புதல்வன்

5—வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
லிடோ (யாழ் நகர்)

ஏ. வி. எம். ராஜன்
ரவிச்சந்திரன்
லட்சுமி, சாவித்திரி
சந்திரகலா
சோ (இரட்டை வேடம்)
மனோரமா
ஆனந்தன்



# புகுந்த வீடு

212 வது தினம் கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டுநகர்)



சிவாஜி
கணேசன்
வாணிஸ்ரீ
நடித்த

(ஈஸ்ட்மென்கலர்)

# வசந்த மாளிகை

கெயிட்டி

இது சத்தியம்

அடுத்த

நீங்காத நினைவு

x———x———x———x

வெகு விரைவில்

செல்லமகாலில்

K. பாலசந்தரின்
நியூ வேவ் படம்

அரங்கேற்றம்

பலரின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க
நீடிக்கப்பட்டுள்ளது.

செல்லமகால்

கதை—வசனம்—டைரக்ஷன்

கோபு

# காசேதான் கடவுளடா



7வது வாரம்

முத்துராமன்
M. R. R. வாசு
தேங்காய் சீனிவாசன்
ஸ்ரீகாந்த்
மூர்த்தி
டைப்பிஸ்ட் கோபு
லட்சுமி
மனோரமா
ரமாபிரபா


இப்பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19-ம் [illegible] பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org